
உ

# ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்



# மகா கும்பாபிஷேக மலர்

255.22
ஆத்தி
SLIPR

துந்துபி வருஷ தைத்திங்கள் 13 ஆம் நாள்

**(26-01-83)**

மண்டலாபிஷேகப் பூர்த்தி வெளியீடு

"DRAKE" Bicycles
**LADIES & GENTS**

"RALEIGH"
Bicycles
**GENTS**

விற்குமிடம்

## சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டற்

206, 208, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 22462

உ

சிவமயம்

ஓம் பிரணவானன தேவாய நம



## ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்


# மகா கும்பாபிஷேக மலர்

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர் பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

— திருவிளையாடற் புராணம்

ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தரும பரிபாலன சபை.

**1983 - 01 - 26**



மூலமூர்த்தி

# ஆசியுரை

''கிரியாகலாப முக்தாமணி''

**சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள்**

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பரம்பரை அர்ச்சகர், நயினாதீவு.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள், சுதுமலை-மானிப்பாய்.

அஞ்ஞான திமிராந்தஸ்யே
ஞானம் ஜன சலாகயா
சக்சுருன் மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம.

வேதங்களின் சாரமாக விளங்குவது பிரணவம். பிரணவத்தின் தோற்றமே முழுமுதற் கடவுளாக விளங்குபவரும், பூதகணங்களால் போற்றித் துதிக்கப்படுபவரு மாகிய விநாயகனுகும். எந்தச் சடங்குகளைச் செய்யத் தொடங்கும்போது, முதலில் விநாயகரைப் பூசித்து விக்கினங்கள் வராது காப்பாற்ற வேண்டும் என்று துதிப்பது சைவ மக்களின் மரபு. ஒரு நாள் ஒளவையார் கயிலைக்குப் போகவேண்டும் என்ற ஆசையால் விநாயக பூசையை சுருக்கமாகச் செய்ய எத்தனித்தார். அப்போது "ஒளவையே எனது பூசையை தவறாது ஆறுதலாகச் செய். உன்னைக் கயிலைக்கு முத லில் அனுப்புவேன்'' என அசரீரி கேட்டது. ஒளவையாரும் அவ்வண்ணமே பூசையை செய்து கயிலையை முதலில் அடைந்தார். ஆகவே விநாயகன், தம்மை வழிபடுவோருக்கு நினைத்ததை நிறைவேற்றி வைப்பார்.

''ஒற்றை மருப்பும் மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் பெற்றதொரு
தண்டைக் கால் வாரணத்தைத் தன் மனதி
லெப்பொழுதும் கொண்டக்கால் வாராது கூற்று.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றபடி நாம் எமது பிரபஞ்ச சாகரத்தில் இருந்து விடுபடவும், ஆத்ம ஈடேற்றத்துக்காகவும் ஆலயம் அமைத்து அங்கு ஆகம விதிப்படி மூர்த்திகளை ஸ்தாபித்து வழிபடுகின்றோம்.

இவ்வூர் மக்கள், பெரும் பொருட்செலவிட்டு ஆத்தியடிப் பெருமானுடைய ஆல யத்தை ஆகம முறைப்படி, மனதைக் கவரும் புனித ஆலயமாக மறுசீரமைத்துள்ளனர். நித்திய, நைமித்திய பூசைகள் தவறாது நடைபெற்று வருகின்றன. துந்துபி வருடம் தைத்திங்கள் 13 ம் நாள் (26-01-1983) பஞ்சகுண்டயாகசாலை அமைத்துப் பெரும் சாந்திவிழா செவ்வனே நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து மண்டலப்பூர்த்தி விழாவும் இன்று நடைபெறுகிறது (16-3-83) இவ்விழாக்களில், பிரதம குருவாகப் பணியாற் றும்படி இறைவன் எம்மிடம் பணித்துள்ளார். நாம் அவன் பணியை ஏற்று இம் மாபெரும் சாந்தி விழாவை இறை அருளால் இனிது நிறைவுறும் இச்சந்தர்ப்பத்தில், இவ்வாலயத்தைக் குறுகிய ஒன்பது மாதகால இடைவெளிக்குள், புதுப்பொலிவுடன் அமைத்த பரிபாலன சபையையும், இவ்வூர் அன்பர்கள், அடியார்கள் பொருளுதவி, சரீர உதவி செய்தவர்கள், இம்மலரை அச்சேற்றி வெளிப்படுத்திய சபையாருக்கும் ஏனை

யோருக்கும் எல்லாம் வல்ல ஆத்தியடிப் பெருமான் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்து விக்கினங்கள் வராது காப்பாற்றுவாராக.

சுபம்

ஓம் தச்சம் யோரா விறினிமஹே

காதும் யக்ஞ்ஞாய காதும் யக்ஞ்ஞபதயே
தேய்வீர் சுவஸ்திரஸ்துனசுர் சுவஸ்திர்
மானுஷேபபியம் ஊர்த்து வெஞ்சு காது பேஷசம்
சன்னோ அஸ்த்து துபதே சஞ்ச துஷ்பதே
ஓம் சாந்தி — சாந்தி — சாந்தி.

கடவுளின் பொருட்டு செய்யப்படும் இப்பெரும் சாந்திவிழா, யாகம், யக்ஞம், முதலியன ஈர் ஏழு உலகிலுமுள்ள சகல ஜீவ சந்துக்களுக்கும், தேவர்கள், மானுடர், விலங்குகள், ஊர்வன, பறப்பன, நடப்பன, அசைவன முதலியனவற்றிற்கும், மலை, குன்று, ஆறு, குளம், விருட்சம், செடி, கொடி முதலியனவற்றிற்கும் பெரும் அமைதியையும் சாந்தியையும் கொடுப்பனவாகும்.

சுபமஸ்து.

● அறிவொளியில்லாத பக்தர்கள் சமய இருளில் நின்று சண்டையிடுவார்கள். அறவழி நடப்பவன் தடக்கிவிழவே மாட்டான்.

உ
கணபதி துணை

ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் பிரதம குருககள்

## சதா. சிதம்பரப்பிள்ளைக்குரு அவர்கள் கூறும்

# பிரார்த்தனை உரை

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாதம் நமஸ்தே.

அனாதியான பதி, பசு, பாசம் ஆகியவற்றுள் முதன்மை வாய்ந்த பதி பஞ்சகிருத்திய மென்னும் ஐந்தொழிலைச் செய்ததாலேயே உலகம் நடைபெறுகின்றது. இப்பதி ஆன்மாக்களை ஈடேற்றி ஆளும் பொருட்டுப் பல மூர்த்தங்களைக் கொள்ளும். அம் மூர்த்தங்களுள் ஒன்று ஓங்காரம் என்னும் பிரணவ மூர்த்தம் ஆகும். இம் மூர்த்தமே விநாயக வடிவமாகத் திகழ்கின்றது. இவ்விநாயகப் பெருமான் திருவுருவத்தில் வலப் பாகம் கொம்பு உடைமையால் ஆண் போலவும், இடப்பாகம் கொம்பு இன்மையால் பெண் போலவும், இரண்டும் ஒன்றாய் இணைந்து இருப்பது ஆண் பெண்களாகிய சகல சீவராசிகளையும் தற்பரசிவத்தின் இயல்பையும் அவர் கொண்ட கேவல வடிவையும் சக்தி ஓர் கூறாகவும், சிவம் ஓர் கூறாகவும் கொண்ட அர்த்தநாரீசுவர வடிவத்தையும் கொண்டு விளங்குகின்றார்.

இத்தகைய மேலான விநாயகப் பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கும் ஆலயங்கள் பல அவற்றுள் ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தில் 1964-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் தொடங்கித் தொடர்ந்து இந்நாள் வரை நித்திய பூசகராய் இருந்து பூசித்துவர எம்பெருமான் எமக்கு அளித்து அருளியவாறை எப்படி எடுத்து இயம்ப இயலும். ஒரு மகாகும்பாபிஷேகத்தைப் பூரணமாகக் கண்டு தரிசித்தாலே பெரும் பாக்கியம் என சைவாகமங்கள் கூறுகின்றன. இவ்வாலயத்தில் பணி செய்த புண்ணியத்தாலும், பிள்ளையாரின் கிருபையாலும் அடியேன் 1967-ம் ஆண்டு சித்திரைத் திங்களில் நிறைவுற்ற மகா கும்பாபிஷேகத்தையும், தற்போது நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தையும் பூரணமாகக் கண்டு தரிசிப்பதோடமையாது கும்பாபிஷேக கிரிகைகளிலும் பணி செய்யும் பாக்கியத்தை எம்பெருமான் எனக்குக் கொடுத்தருளிய மையையிட்டு ஆனந்திக்கின்றேன்.

பண்பு மிகு இவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இத்திருக்கோவிலில் திருப்பணி பல செய்து இன்று குடமுழுக்கென்றும் மகா கும்பாபிஷேக விழாவை இனிதே நிறை வேற்றும் வைபவத்தில் அடியேனும் பங்குகொண்டு ஆனந்திக்கின்றேன். ஆத்தியடி விநாயகரின் திருஅருள் அனைவருக்கும் அனைத்தும் நன்மைகள் கிடைக்க எம்பெருமானைத் திரிகரண சுத்தியுடன் வேண்டுகின்றேன்

துன்னாலை ஸ்ரீ மிந்திரன் அம்மன் கோவில் ஆதீனகர்த்தாவும்,
ஆத்தியடி பிள்ளையார் கோவில் பிரதம குருக்களுமான
**சதா. சிதம்பரப்பிள்ளைக் குருக்கள்**

**அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்**
**இளைப்பாறிய நீதியரசர் மாண்புமிகு**
**திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

மனிதனின் இடர்கள் அனைத்தையும் தீர்ப்பவர் விநாயகப் பெருமான். "வழிபடுமவர் இடர் கடி கணபதி'' என்று அருளினர் திருஞானசம்பந்த நாயனர். பருத்தித்துறைப் பகுதியில் ஆத்தியடியில் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்பே அப்பெருமானுக்கு அங்குள்ள மக்கள் திருக்கோவில் அமைத்து அப்பெருமானின் அளப்பிலா அருளைப் பெற்று வருவது யாவரும் அறிந்ததே. பல அன்பர்களின் ஒத்துழைப்பால் அவ்வாலயம் புனருத்தாரணத் திருப்பணிகள் இனிது நிறைவெய்தி இம் மாதம் 26 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற விருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய சம்பவமாகும். அவ் வைபவத்தையொட்டி ஓர் சிறப்புமலர் வெளியிடத் திட்டமிட்டிருப்பதும் பாராட்டுக்குரிய நிகழ்ச்சியாகும். விநாயக மூர்த்தியின் திருவருளால் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறுக: இதில் பங்குபற்றும் எல்லோர்க்கும் திருவருள் பெருகுக: என வாழ்த்துகிறேன்.

வீ. சிவசுப்பிரமணியம்
*17-01-83*



உ

ஓம் கணபதி

# சமர்ப்பணம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

விநாயக வழிபாடு பண்டைக்காலத்தில் இலங்கை, இந்தியா, அன்றி திபெத்து, பர்மா, தாயிலாந்து, இந்துசீனா, யாவா, பாலி போன்ற நாடுகளிலும் கிழக்கே சிங்கப்பூர், மலேசியா, சீனா, யப்பான் மேற்கே பேரு, மெக்சிக்கோ பிஜிதீவுகள் வரை பரவி இருந்தது. இன்று இந்நாடுகளிலும் இன்னும் வேறுபல நாடுகளிலும் விநாயக வழிபாடு வழக்கிலுண்டு. கணபதி பூசை கைமேல் பலன் என்பது பழமொழியாகும். கணபதி வழிபாட்டினை எவரும் மிக எளிதாகச் செய்யலாம். பெருங்கோவிலோ கட்டிடமோ அவசியமன்று. பசுவின் சாணத்தால் பிள்ளையாரை உருவகித்து அகரம்புல சாத்தி வணங்குவதிலிருந்து பெருங்கோபுரம் கோவில் வரை சமைத்து வணங்கலாம். இக்காரணங்களால் மேலும் விசேடமாக யாழ் குடாநாட்டில் மற்றெல்லாத் தலங்களிலும் பார்க்க சென்ற இடமெல்லாம் அதிகமாக விநாயக ஆலயங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றது.

காலாந்தரத்தில் எங்களால் ஆக்கப்பெற்ற எப்பொருளும் புதுமை குன்றுவது போலவே திருக்கோயில்களின் சாந்நித்தியம் கால ஓட்டத்தில் குறைவுறுகின்றது. இச்சாந்நித்தியம் குறையாமல் இருத்தற்பொருட்டே அவ்வப்போது சைவ நூல்களில் சொல்லப்பட்டருளியவாறு மகாகும்பாபிசேகம் செய்கின்றோம். இதன் மகிமையை எவராலும் எடுத்தியம்ப இயலாது என்பதை ''பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்'' என்று திருஞானசம்பந்தரின் தேவார வரியிலிருந்து விளங்குகின்றதல்லவா? இறைவன் அருவமாகி பின் அருவுருவமாகி இறுதியில் உருவமாகும் பெரும் பொருள் பதிந்த தத்துவத்தை மகாகும்பாபிசேகக் கிரியைகள் எமக்கு நினைவூட்டுகின்றன. மந்திரம், கிரியை, பாவனை முதலியனவற்றால் இறைவனை விக்கிரக உருவத்தில் சாந்நித்தியம் பெறச் செய்து வணங்குவதால் அவர் அதனின்றும் வெளிப்பட்டு எமக்கு அருள்புரிய வழிவகுப்பதே மகாகும்பாபிசேகமாகும். நித்திய பூசையில் ஏற்படும் குறைகளை நிவர்த்து செய்ய நைமித்திய பூசைகளும், நைமித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளைத் தீர்க்க மகாகும்பாபிசேகம் என்னும் பெருஞ்சாந்தி செய்யப்படும். இந்நோக்கத்தின் பாலே நாமும் ஆத்தியடிப் பிள்ளையாரின் திருவருளோடு இயன்றளவு அடியார்களின் பேருதவி, பொருளுதவியால் மகாகும்பாபிசேகம் செய்கின்றோம்.

கோயில் வரலாற்றைக் கூறும் தனி நூல் இயற்றுதல், கோவிலில் நடைபெறும் விசேட வைபவங்களை முன்னிட்டு மலர் வெளியிடுதல் போன்ற வழக்கு முற்காலத்திலிருந்ததாகத் தெரியவில்லை. இதனால் பண்டைய காலத்தில் சைவ ஆலயங்களில் நடைமுறையில் இருந்த நெறி முறைகளை எல்லோரும் அறியக்கூடியதாகவில்லை. அன்றியும் பல அரிய சைவ நெறிமுறைகள் காலப்போக்கில் அழிந்து போகவும் புதிய அநாவசிய நாகரீக முறைகள் புகுந்து சைவப் பண்புகளின் மேன்மை குன்றிப் போகவும் இடமேற்படலாம். மகாகும்பாபிசேக வைபோகங்களை முன்னிட்டு மலர் வெளியிடும் நல்லதோர் வழக்கம் தற்போது கோயில்களில் நடைமுறைப் பட்டு வருவதை நாம் எல்லோரும் அறிவோம்.

உரு அற்ற இறைவனை வணங்குவதற்காக நாம் பெருஞ் செலவில் ஆத்தியடிப் பிள்ளையார் என்னும் திருக்கோயில் சமைத்து

அவருக்கோர் திருவுருவும் கொடுத்து திருவருளை வேண்டி வணங்குகின்றோம். இத் திருக்கோயில் எம்மையும் இறைவனையும் இறுக இணைப்பதற்கு அமைக்கப்பட்ட ஓர் சாதனமே யன்றி வேறொன்றுமறியோம். பிள்ளையாரின் பெருமையையும் அருமையையும் இப்பொழுது நடக்கும் மகாகும்பாபிசேகத்தையும் அதில் பங்கு கொண்டு நாம் அடையும் ஆத்ம ஆனந்தத்தையும் விநாயகரின் அருளால் இவ்வூர் மக்கள் அனைவரும் பொலிவும் நிறைவும் பெற்றிருப்பதை நினைவுபடுத்தவும் இவ்நினைவான ஆனந்தத்தை மற்றும் அடியார்களோடு பகிர்ந்து இன்புறுவதற்கும், இத் திருக்கோயிலையும் எம்மையும் இணைத்து வைக்கும் பாலமாகக் கருதி இச்சிறு திருக்குட முழுக்கு நினைவுமலரை அன்புடன் ஆத்தியடிப் பிள்ளையாரின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழ வினையறுமே.

ஆ. குமாரசாமி
செயலாளர்.



உ
கணபதி துணை

# தலைவர் உரை

''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து''

**ஆ**த்தியடிப் பிள்ளையார் ஆலயம் மிகப் பழைமை வாய்ந்தது. தற்போது அமையப் பெற்றிருக்கும் ஆலயம் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன் கட்டாடி சீமாவென்னும் இடத்திலிருந்து இடம் பெயர்ந்து அமைக்கப்பட்டதாகும். தன்னை வழிபடும் பக்தர்களுக்கு அருள்புரிந்து விக்கினம் அணுகாவண்ணம் காத்தலால் விக்கின விநாயகன் என்று அழைக்கப்படும் பிள்ளையாருக்கு, சித்தி விநாயகர், செல்வ விநாயகர், கணநாதர், கணபதி இன்னும் எவ்வளவோ பெயர்களிட்டு திரிலோகங்களிலும் வணங்கப்படுபவராவர். எமது கிராமத்திலும், ஆத்தியடிப்பிள்ளையார் எனும் திருநாமத்துடன், நிலைத்து நின்று அருள்புரிந்து வருகின்றான் விநாயகப்பெருமான்.

இவ்வாலய பரிபாலனம், ஆத்தியடிப் பிள்ளையார் தருமபரிபாலன சபையின் கண்காணிப்பிலேயே பலகாலமாக இருந்து வருகின்றது. இப்பொழுது உள்ள பரிபாலன சபையினர் ஒன்றுகூடி ஆத்தியடிப்பிள்ளையார் கோவில் சாந்நித்தங் குறையாமல் இருத்தற் பொருட்டு காலந்தோறும் கும்பாபிஷேகஞ் செய்தல் வேண்டும் என்ற ஆகம விதிகளுக்கமைய கும்பாபிஷேகத்தைத் தற்போது செய்தல் வேண்டுமென்ற தீர்மானத்துக்குள்ளானார்கள் அவ்வாறே நாம் பாலஸ்தாபனம் செய்து இவ்வாலயத்தின் பழுது நிலையில் இருந்த கூரை, சுவர்கள், தூண்கள், மண்டபம் முதலியவற்றைத் திருத்தியும் புதிதாக வாகனசாலை, களஞ்சிய அறை, குருக்கள் சன்நிதானம் அமைத்தும் சண்டேஸ்வரர், மூலமூர்த்தி, எழுந்தருளி, தேவர்சபை ஆகிய புதிய திருப்பணி வேலைகளைச் செய்தும் விநாயகர், முருக, பைரவ மணிக்கூட்டு ஸ்தூபிகளையும், வாகனங்களையும் புதுமொருகூட்டி மிகக் குறுகிய காலத்தில் முற்றுவித்து இன்று திருக்குடமுழுக்கு வைபத்தை நிகழ்த்துகின்றோம். கும்பாபிஷேகம் பல வகைப்படும், அவற்றுட் சிறந்தது மகா கும்பாபிஷேகம். இதனைப் பெருஞ் சாந்தி என்றும் வழங்குவர். ஒருவர் தம் வாழ் நாளில் ஒரு கும்பாபிஷேகத்தையாவது கண்ணாரக் கண்டல் வேண்டும் என்பர் பெரியோர். அவ்வகையில் இன்றைய மகா கும்பாபிஷேகத்தைச் செய்ய இச்சபை அவனருளைப் பெற்றுள்ளமை பெறுதற்கரிய பாக்கியமே எனக் கருதுகின்றேன். மேலும் எல்லாம் வல்ல அவன் திருவருளால் தொடர்ந்தும் பல திருப்பணிகள் இச்சபை செய்யுமென்பது எம் அசையா நம்பிக்கையாகும்

இன்று நிகழும் குடமுழுக்கு விழாவை, சைவாகம விதி முறைப்படி முன்னின்று நடத்திய பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச மகேஸ்வரக் குருக்கள் அவர்கட்கும் அவரது சகாக்களுக்கும், இவ்வாலய நித்திய பூசைகளை நடத்திவரும் குருக்களாகிய சதா. சிதம்பரப்பிள்ளைக் குருக்கள் அவர்கட்கும், எம் நன்றி உரித்தாகுக.

ஆலயம் புனரமைப்புக்கு மனமுவந்து, நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி அளித்த அன்பர்களுக்கும் குறிப்பாகத் திரைகடல் கடந்து சென்று நிதியுதவி அளித்த அடியார்களுக்கும், புனரமைப்பு வேலைகளைச் சிறப்புறச் செய்த சிற்பிகள், தொழிலாளிகள், சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் புரிவாராக. இவ்வாலய தருமபரிபாலன சபை மேலும பல திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து செய்ய ஆத்தியடி விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

வணக்கம்.

ச. சிவராமலிங்கம்
தரும பரிபாலன சபை - ஆத்தியடி.

உ

# ஆலயப் பெருமை

''பெருமையும் சிறுமையும் தான்தர வருமே''

தெட்சணகைலாய மான்மியம் விதந்து கூறும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், சுவர்ணயம், எமகூடம், காந்தாரம் என்பனவாய தலங்களும் அதனை ஒழிந்த மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமையும் உடைய ஏனைய பல தேவாலயங்களும், ஞானிகள் மெய் அடியார்கள் அன்பர்கள், பக்தஜீவகோடிகள், யாவர்க்கும் மூவிழ்ந்த பெருங் கருணை மழை பொழிய விளங்குவது எம் ஈழவளநாடு, இதன் சிரசாய் மிளிர்வது யாழ்நகர். அதன் திலகமே வடமராட்சியின் ஓர் பிரிவாயதும் பச்சிமபுலவைகான நகரமென எம் மூதாதையரால் நாமகரணம் சூட்டப் பெற்றதுமான மேலைப் புலோலி இதனுள்ளும் சிறப்புற்றது ஆத்தியடி என்னும் பழந்தமிழ் பதியாகும்.

இப்பதிகதனே வதியும் பெருங்குடி மக்களால் ஏற்றியும், போற்றியும், துதித்து வழிபட சர்வானுக்கிரக மூர்த்தியாய் சுத்தசாட்குண்ணிய சர்வபரிபூரணரே என ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானே ஆத்தியடி நல்நகரின் நடுவனே உள்ளதும் புதுப்பொலிவுடன் கூடியதுமான மூலாலயத்தில் சாந்நித்தியராய் எழுந்தருளி வீற்றிருக்கின்றனர்.

''முக்காலத்தினு மொத்தியல் பொருளை
செப்புவர் நிகழும் காலத்தானே'' (நன்னூல்)

அன்றியும் முன்னே முதுகளிற்றின் கோடொற்ற பின்னே பிடியின் மருப்பூன்ற இடைநின்ற இளங்களிறுகிய கூர்வடிவேல் குமரனுக்கு ஆலயமும் அடுத்து பங்கயாசனன் ஒரு தலைகிள்ளி வானவர் குருதியும் அகந்தையும் கொண்ட ஞாலி ஊர்த்தியாம் வைரவ மூர்த்தி அமர்ந்து காவல் கொண்டுள்ள இருக்கையும் அமைந்துள்ளது.

மேலும் தூபிகள் துசத்தம்பம் பலிபீடம் மூஷிகம் விக்கிரகங்கள் மணிக்கூண்டும் கோபுரம் வாகனசாலைகள் என்பன புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. அப்பெருமானின் குடமுழக்காபிஷேகத்தை ஒட்டி வெளிவந்துள்ளது இதனை அடக்கிய இம்மலராகும். ஆத்தியடி என்னும் பெயரும் ஆத்தியடி, ஆலடி, மருதடி, மாவடி என்பன போன்ற தல விருட்சங்களின் பெயரால் அமைந்த ஆலயப் பெயர் எனக்கொள்ளலாம். இப்போதுள்ள ஆலய நிலையம் நிருமாணிக்கப்படமுன் அண்மையில் உள்ள ஒரு காணியில் வைத்து ஆராதிக்கப்பட்டதாக சரிதம் உண்டு. அன்றியும் ஆரூர் ஒற்றியூர், ஆலவாய் போன்ற ஊர்ப்பெயரே அவ்வத் தெய்வங்கட்கு ஏற்பட்டும் இருக்கலாம்.

தற்போதைய ஆலயம் கெற்பக்கிரகத்திலிருந்து ஒவ்வோர் மண்டபமும் நவிதிருத்தப்பெற்று அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பங்கள், ஸ்தூபிகள், சிகரங்கள், அமைக்கப் பெற்றனவாய் தலைசிறந்த வர்ணங்கள் தீட்டிப் புதுப்பித்தமை கண்களுக்கு மிகுந்த கவர்ச்சியை அளிக்கின்றன. மேலும் வானளாவும் விருட்சங்களும், உத்தரத்து அயலிலே கற்பகதரு எனப்படும் பனைகள் அழிக்கப்பட்டு விளைபயிர் கழனிகள் தோட்டங்களாக அழகு தருகின்றன. குணதிசையில் பெருமை மிக்குள்ள கலாநிலையமாகிய இளைஞர் கல்வித் தேர்ச்சி சங்க மண்டபம் அமைந்துள்ளது. மாரியில் நீரோடும் வாய்க்கால் புளியடி என்ற பெயருக்கமைய ஓர் நீரோடைப் பாதையொன்று அடுத்த ஊருக்கூடாகவும் வளைந்து நெளிந்து நீண்டு சென்று பாக்கு நீரிணையுடன் சங்கமமாகின்றது. மற்றிரு தஷிணயன, குடதிக்குகளில், தொண்டர்களும் அடியார்களும் அர்ச்சகரும் வசிக்கும் வாசஸ்தலங்கள் உப அஞ்சலகமும் மருவியுள்ளன.

சிவதொண்டர்களும் இறை அன்பர்களும் பல அடியார்களும் ஆடிப்பாடி எம்பெருமானை வணங்கும் விழாக் காலங்களும் மற்றைய கந்தசஷ்டி, விநாயகசஷ்டி நவராத்திரி, வருடப்பிறப்பு மகரசங்கிராந்தி, தீபாவளி, கார்த்திகை, சிவராத்திரி, திருவெம்பாவை முதலிய விசேட பூசா காலங்களும் இஃதன்றி நித்திய பூசை நேரங்களும் மாறின்றி ஒழுங்காக ஆத்தியடி பிள்ளையார் கோவில் தருமபரிபாலன சபையாராலும் அவர்களோடிணைந்து நடாத்தும் பூசகராலும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. விழாக்கள் வேதாகம விதிகளுக்கமைய நேரக்கட்டுப்பாட்டுடன், தற்காலிக நாகரீக ஆடல் பாடலின்றி அமைவதும் ஒன்பதாம் விழாவன்று எம்பெருமான் சித்திரவேலைப் பாடமைந்த தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவதும், அடியார்கள் கோஷமும், பயனைகளும் மக்களைப் பரவசமூட்டும் தன்மையது.

இவ்வாறுகிய பரிபாலனத்திற்கு, கிராமமக்கள், அன்பர்கள், அடியார்கள் சந்தா முறையிலும், உபயரிப்பாகவும் செலுத்தும் தொகையிலேயே நித்திய நைமித்திய பூசைகளைக் குறைவின்றி நடத்த அருளிய எம்பெருமான் கருணைத் திறத்தை வேண்டி வணங்குவாம்.

விநாயகப் பெருமானுக்கு சுமார் பதினெட்டு வருடங்களாக பூசைத்தொண்டு புரிந்துவரும் அர்ச்சகரும், தமது சொந்த இடந்துறந்து, ஆலயத்துக் கருகாமையிலேயே குடியமர்ந்து, தமது பொறுப்பை நிர்வகித்து வருகிறார். எம்பிரானுக்கு அரிதே செய்யப்படும் மகாகும்பாபிஷேக தினத்தன்று அடியார்கள் அன்பர்கள் எல்லோரும் கலந்து பொலிந்து விளங்கும் குடமுழுக்கை தரிசித்து வணங்கிப் பெறுதற்கரிய பெரும் பேற்றைப் பெறக் கடவார்களாக. பெற்றவர்கள் அடியார்கள் எல்லோரும் பெருவாழ்வு பெற்று வாழவும் பெருமையோடு பூசகரும் பரிபாலனசபையும் மேலும் பல பணிகளை அவ்வக்காலம் ஆற்றித் தொண்டுகள் புரிந்து சிறக்கவும் அயலவர்கள் அன்பர்களும் அடியார்கள் யாவரும் இறைவன் இன்னருள் பெற்றும் எம்பிரானுக்கு இயன்ற பணி செய்தும் வாழ்நாளை வீழ்நாள் ஆக்காது நற்கதி பெறவும் வேண்டி எல்லாம்வல்ல வேழமுகத்தனை வழுத்துவோமாக.

சு. சிதம்பரப்பிள்ளை
இளைப்பாறிய தமிழ் ஆசிரியர்
ஆத்தியடி - மேலைப்புலோலி

உ

கணபதி துணை

## ஆத்தியடி விநாயகக்கடவுள்

# பதிகம்

### காப்பு

சிந்தித் தவர்க்கருளுஞ் சிற்பரா னந்தமய
வெந்தையே தந்திமுகா விப்பதிகஞ் -- சந்தச்
சுவையும் பொருட்சுவையுஞ் சொற்சுவையும் பெற்றே
யவையடைய யீவா யருள்.

### அடைக்கலம்

இந்தமாவுலகினண்ணு தற்கரியவெழில்பெறுமானுடப்பிறவி
யீந்தனைமுன்செய் தவத்தினுலடியேனியற்றிலனொருதவமின்னே
சிந்தையிலுள்ளேனுன் திருநாமஞ்சிவனடியார்குழுநாடேன்
சேருவேனின்னை நினைகிலா தவரைத்தினருக்கொன்றையுமுதவேன்
கொந்தவிழ்மூலையார்மயக்கினிலலேவேன்கோபமோடவ்வியமகலேன்
கோள்களேயுடையேன் குருவருளிலேயேற்கொடியனேன்பவக்கடல்கடந்து
அந்தமிலின்ப நின்னடிக்கமலமணையுமாறெதுகொலோவறியேன்
ஆத்தித் தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (1)

தேசுயர்சூரபதுமனுமவுணன்சினந்துறந்துவிசயிக்காது
திசமரன்பூசைபுரியநற்பூங்காவைத்தனஸ்விண்ணவர்கோமான்
நாசமத்துவுமடைந்ததுசூழ்வால்நாரமதின்றியேயந்த
நாளிவிலவனுநாரதன்பணியால்நண்ணிறனுன்னைநயதற்குத்
தேசிகன்ஞானக்குறுமுனியெதிரேசென்றுநற்கொடியுருவெடுத்துச்
சிந்துகாவேரிகாகநீர்சிந்திவரித்துநின்கருணையமெதங்கோ
ஆசையைக்கலேயைநிதம்நினதடியிலன்பினைக்கழலிணையருளா
யாத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (2)

அரியயன்முனிவர்புரந்தரன்முதலாமமரருந்தேடொணுமுதலே
யாரணப்பொருளேயாலயர்கடவுளம்பிசையளித்தசற்குருவே
சரவணபவற்கு முன்னவா தந்திமுகத்தனே தனிமயிலிவர்ந்து
தகுவரையழித்துவானுவகளித்த தற்பராகணபதிசயனே
வரதனேமன்னர் தரியலர்தேவர்வசிகரம்மாமெழிற்கல்வி
வளர்சிவஞானமுனதிருநாமமனதினிலனுதினமுன்னு
மரியநற்பேறுதந்தினியான்வாயலச்கணிற்பட்டுழல்வேனை
யாத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (3)

கவிமகாமுனிவன்பத்தினிமுகுந்தைகட்டிளவருக்குமாங்கதனைக்
கானிடைகண்டுமயங்கினள்மகவுங்காமநோய்தலைக்கொளத்தணிப்பான்
அவன்பினேசென்றுநைந்தனளவனுமிணங்கிலனதற்குருத்துரைத்தா
ளனுகொணுக்குட்டநோயுடல்பிணிக்கவருங்கொடுஞ்சாபமங்கதனை

நவையறநீக்கவொருவருங்காணனண்ணினன்றஞ்சமென்றுனையே
ஞாயகநீயுமதுவொழித்தாண்டாய்நாயினுங்கடையனேனிந்த
வவனியில்மிடியேபிணியதேவருத்தவலைவதுகண்ணுறுயேனோ
ஆத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (4)

பொன்னவிர்கொன்றைநதிமதிநாகம்புனைமுடிப்புண்ணியர்வலம்வர
புவியெனவவரைவலமதுவந்துபுகலுமாங்கனியினைப்புழைக்கை
தன்னிலேவாங்கிச்சங்கரன்றனேசகமனைவயெலாமெனக்காட்டித்
தானவர்சூழுவைவாட்டியேயமரர்தம்பதியளித்ததற்பரனே
என்னகங்குடிகொளீசனேயென்னையென்மனைமகார்தமைக்கிளையை
யிடர்மிடியெவ்வம்பகைவினையெனவையும்பற்றிடாதொழித்தருளெமக்கு
அன்பதையுன்றனடியினிலடியாரடியினிலயர்விலாதென்று
மாத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (5)

நானுனக்கேதுகுறையதைப்புரிந்தேனனிலத்தொருதுணையின்றி
நாயினுங்கடையாய்த்திரியவேயுன்றனுமமதொருபொழுதுன்னு
வீனரோவளைக்குப்பேரனேமகவானென்னவேவாழ்வினைப்பெறுவா
ரிறைவனீயானுன்னடிமையேனிந்தவிழிவினைப்பெறுவதுமுறையோ
தேனுகர்வண்டுமொய்குழல்வல்லைத்தேவியைப்பாங்கரிலுடையோய்
சிறுகுடிநவிலேகுறவர்கோன்வளர்த்ததெய்வதக்கன்னிகையாரு
மானனமுடையவண்ணலைமணக்கவருளியமுதல்வனேவிகடா
வாத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (6)

திருசெநெல்நாழியிரண்டினால்மூன்றுபத்துடனிரண்டெணுந்தருமந்
தந்திடுதேவிமுதன்மகவாகிப்பரிந்திரந்திடுபவர்க்கினிய
வரமருடலைவனியெனநம்பிவந்துநானடைந்தனனென்முன்
வாவிவியரியநின்றிருக்கோலவடிவினைக்கண்ணுறவெளியேன்
தரிசனைசெய்துமலவிருளோட்டத்தனிப்பெருமஞ்செழுத்தோது
தக்கநன்னெறியைத்தாவெனைவாதபயிததிபமையமுய்வாட்டா
தரிதிருமாலோன்மருகனேமுருகோனண்ணலேவரதனேசயனே
ஆத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (7)

பின்னைவெண்பிறையைச்சூடியபெருமான்பிராட்டியோடுயர்கிரிக்கயிலை
பெட்புறுமருங்குபோயினரங்குபிரணவம்பினைதலைப்புரியக்
கன்னுறுதாமக்குழலுமையிதென்னகாரணமெனவினவுதலுங்
கருதுநம்பிள்ளைவருகநீயென்றுசண்ணுதலழைத்திடவந்து
வெள்ளைமாலுருமாசனுக்காகவெங்கயமுகவனொடமரை
விளைத்துமுமெறுத்தைறக்கொம்பினுலுயிரைவிட்டியபகவனேயடியே
னள்ளிலேவேற்கணரிவையர்மயக்கிலலைவுறுதிருக்குநாளுளதோ
ஆத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (8)

ஏகநந்தாலம்போதராசுமுகாவெழிற்கசகர்ணிகாவிகடா
இருவினைதவிர்க்குங்கசானனகபிலாவினியவெண்பாலசந்திரனே
நாகரையளித்தகணநியட்சாயாநல்வயிலாத்தூமகேதுவேயெம்
நடலையையழிக்கும்விக்கினராசாநற்கதியருள்கணதிபதி
வாகினையுடையசூர்ப்ப ர்ஞசிர்வக்கிரதுண்டவேரம்பா
வரமருள்கந்தபூர்வசாவென்றேமன்பெயரிலாநினையெளியே
னுருவாகனசிந்தாமணிசயனேயர்ச்சிக்கவனுதினமருளாய்
ஆத்தித்தண்ணிழற்கோயில்கொண்டருளும்விநாயகாவடைக்கலமுனக்கே. (9)

## அற்புதானந்தம்

சனகாதிநால்வருக்கன்றுகல்லானிழற்றனிஞானநிலைகாட்டிநீ
தனையாகுமவர்பாசவினைநீக்கிநின்மலர்த்தாளிணைப்புணையவைத்தாய்
எனையாளநீகருதிலல்லவோவெளியேனுமந்நிலைப்பேறுபெறுவே
னிதுமாயவுலகத்திலடியேனுமிழிவானவியல்பிணைப்பெறுதல்வசமோ
இணையானபோதள்வுமுன்றனைக்கருதாதுதீமையேயுள்ளுளூத்தர்
திருவோடுபவுழ்சோடுவாழ்வுறத்திறமேதுதேர்கிலேனுனுமந்தோ
அனைமாதுபங்கனருடந்திமுகவெந்தையேயமரரிடர்போக்குமுதல்வா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (10)

எந்தவுயிருக்குமுன்னரருள்கிடைக்குமென்றின்சுருதிகலையாகம
மியம்புமொழிபொய்யதோவல்லவெனிலவ்வுயிரிலெளியேனுமொருவனலனோ
வந்தவினைவிக்கினம்பனிபோலமாற்றியருள்வல்லவொருதேவனலவோ
வறுமைபிணியிகலாதியெனைநலிததிடவுனதுவன்கருத்தீநுகொல்லோ
சிந்தையருள்ளுக்கிலாதிருமாந்திருந்திடத்தியனேன்செய்தபவமோ
தின ::தினம்நானுமிங்கலறவுங்கேட்கிலாய்சிறியனேனேதுசெய்வேன்
அந்தமதிழைக்கவங்குசபாசமேந்துகையண்ணலேயைங்கரத்தோய்
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (11)

எனையாளவந்தவொருகுலதெய்வமுனையன்றியில்லைவேறொருவர்கண்டா
யினியவிதவாழ்வினையிகத்தினின்மருவிடவுமெளியனுன்பாதாம்புயந்
தனைவந்துசேவையதுபுரிதந்துபேரின்பசாகரத்திடைமூழ்கவுந்
தக்கவருளின்றுவருமின்றுவருமென்றுளந்தாங்கிப்பொறுக்கவேமன்
தினமதோவாறதுன்னருளதைக்காணிலேன்சின்மயானந்தவுருவே
சென்றுகார்ப்பிள்ளையின்வடிவினையெடுத்துநற்சீர்ப்பொதியமுனிவனெதிரே
அனமாடுபுண்ணியக்காவேரிகரகநீரவனிமிசைதந்தமுதல்வா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (12)

குணமெதுஞ்சற்றுமில்லாததீப்பாவியைக்கோதிலாஞானமிலரைக்
கோபமுடனவ்வியங்கொடுமைமிக்குள்ளரைக்கோள்கலைச்சொல்லுநீர்மை
கணமேனுமொழியாதகசடரைச்சண்டரைக்கண்ணியம்புரிவதல்லாற்
காத்திரத்தோடுவந்தேற்றிடுந்தீனரைக்கண்ணினுள்ளுக்கிலேனுன்
பணிபூண்டுமணிபூண்டுவிநயஞ்செய்நீறுபுனைபழவடியர்கூட்டமனுகேன்
பக்குவம்வந்துநான்பரகதியடைந்திடும்பருவமொன்றுண்டுகொல்லோ
அணிபாணிப்பள்ளியைக்கொள்ளுமான்மருகனேயம்பிகைக்கினியமைந்தா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (13)

சத்ததமுனக்குநான்வந்தனைபுரிந்துநின்றனியெழுத்ததனையோதச்
சாதுசனசங்கமஞ்சார்ந்திடக்கல்விகலைசதமகன்செல்வபோகஞ்
சிந்தைகளிகூர்ந்துநனிபெற்றிடத்தாவரந்திராதவாதமையஞ்
சினந்துவருபித்தமொடுசூழ்பிரமகத்திநோய்சீறுவலிகுன்மகாசம்
எந்தனைத்தொடர்பொலாக்கோள்களின்றோடமேயெமவாதையாமவையெலா
மெனைவந்துநலியாமலினியவருணல்குவாயிமாசலத்தலைவிமதலாய்
அந்தரத்துனையன்றியாரெனக்குண்டுகொல்லாத்திரத்துதவுமுதல்வா
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (14)

நாராயணற்குவெஞ்சாபந்தொலைத்திட்டநாதனீகொம்பொடித்து
நகுமேருவரையிலேபாரதசரித்திரம்நன்குவரைதேவனும்நீ
காராருகண்டன்றிருக்கைமாங்கனியினைக்கைக்கொண்டகடவுளும்நீ
கருதடியர்வினைதீர்த்தவர்க்குதவுவள்ளனீகலைமதிக்குற்றசாபம்
வாராதுநீக்கியருளைங்கரக்களிறுநீமகபதிவடுக்கண்மாற்றி
வல்லபையைவாமத்தில்வைத்தருளுமுதல்வனீமன்பொதியமுனிவனுக்கும்
ஆராதஞானகலையூட்டுதேசிகனுநீயருளுநீயடியனுக்கும்
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (15)

சிந்துரமுகத்தனேமூஷிகமிவர்ந்திடுஞ்சிற்பராதற்பராபுன்
சிந்தைதக்கடங்காதசெல்வமேமுத்திதருசித்தனேயேகநாதா
பந்தவினைபாற்றிடும்பாசாங்குசத்தனேபனிவரைப்ராட்டியார்தம்
பசியமுலையமுதுண்டவிக்கினவிநாயகாபராபரச்சோதிவடிவே
வந்தனைபுரிந்திடும்மன்னுயிர்க்கருளதும்மற்றதுசெயாவுயிர்க்கு
வன்மறக்கருணையுஞ்செய்திடும்பகவனேவானவர்க்குலகளித்த
அந்தமில்சேய்க்குமுன்வந்தமாகுன்றமேயடியனேற்குற்றகுருவே
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (16)

ஏழைக்கிரங்கிடச்சித்தநிற்கில்லையோவெளியனேன்பட்டபாட்டை
யிலவினிற்பஞ்சுதான்பட்டதோசொல்லவோவெண்ணவோமுடிவுபெறுமோ
பேழையுதரத்தனேபிள்ளைமதிசூடியருள்பிஞ்ஞகனமர்ந்தபொருளே
பெட்புடையபிள்ளைநானன்னைநீயென்றுபேருவகையொடிருந்தெனந்தோ
தாழ்வினைப்பிள்ளையதடைந்திடத்தாங்கியேதாயவளிருப்பதுண்டோ
தாய்மனம்பித்துநற்சேய்மனங்கல்லெனச்சாற்றுமொழிபொய்மொழியதோ
ஆழ்வினைக்கென்னைவெவ்விரையதாய்விடுகிலுன்றனருட்கேற்றமென்னே
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (17)

பிள்ளைதான்செய்திடும்பிழையைப்பொறுப்பதுபிதாவுக்கிழுக்கதாமோ
பெருமனேபொல்லேற்கிரங்கிடிற்பேருலகுபேசுமென்றச்சமோதான்
வெள்ளைவாரணமேவுவேந்தனுக்காகவேவேதியன்காசிபற்கு
வேழமாமானனப்பிள்ளையாய்வந்தன்றுவெவ்வசுரரிருவர்தம்மை
உள்ளவர்கொதித்திடக்கோறல்புரிதேவனேயுத்தமர்க்குற்றகுருவே
யுவமிக்கொணாதவோங்காரபிரணவரூபவுயர்வுறுமறைக்குமுதலே
அள்ளிநற்காவிரியகத்தியற்கருளினேயடியனிடர்தீர்த்தருளுவாய்
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (18)

தஞ்சமெனவந்தவர்க்கபயமேதந்திடுதயாநிதிக்கடவுளேபுன்
றமியனேன்படர்தாக்கொழுகொம்பிலாவொருதனிக்கொடிக்கிணையாகியே
நெஞ்சுபுண்ணாகநின்றிங்குநானேங்கவும்நீயதைத்தேர்கிலாயே
நின்மலாசுத்தநற்சோதியாயோங்கியேநீண்டமாலன்னமூர்ந்தோன்
வஞ்சகமனத்தினாற்பிரமமெனவெழுகாலைவன்செருக்கதையழித்த
வள்ளறன்மைந்தனேயைங்கரத்தேவனேவாமனப்படிவமுடையோய்
அஞ்சமர்புரிந்தகத்திமுகவனைச்செற்றுகுவாகனத்தமர்தேவனே
ஆத்திநிழல்கோயில்கொள்விநாயகக்கடவுளேயற்புதானந்தமயமே. (19)

# விநாயகக்கடவுளது பன்னிரவதாரப் பதிகம்

## (1) வக்கிரதுண்டவிநாயகர்

ஆன்மகோடிகளெலாமுன்னைசத்தொடுங்கினராறுதற்கோர்பிரளயத்
தநுசெலத்தநுகரணபுவனபோகத்தையவ்வவர்வினையினுக்கிடதா
யளித்தவர்க்கவர்கன்மவொப்பினின்சேவடியருளிடவுன்னிநீயுந்
தான்பெயருநவுமுன்நடுவீறுமில்லாத்தனிப்பரஞ்சோதிவடிவே
சகவக்ரதுண்டநன்மூர்த்தியாய்மன்பொதுத்தந்தைமுன்மூத்தேவருஞ்
சராசரம்படைத்தளித்தொடுக்குமுத்தொழிற்குமேதந்தவர்பிரமைகொள்ள
மேன்மைபெறுமேதினிப்பேதமனைவயாவையும்விளக்கிநின்னைகட்டினுள்ளே
வேதனின்புதல்விமார்மருங்கிவில்மரவேவேண்டினர்க்கருளமேலோர்
வேந்தனின்வடுக்களையுருக்குமாங்கதனுற்றவெங்குட்டநோயதனையும்
மான்றவழ்மதியினின்சாபமுந்நீர்த்திட்டவள்ளலேசுசானனத்தோய்
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (20)

## (2) சிந்தாமணிவிநாயகர்

அந்தணர்கபிலருக்காகநற்சித்தியோடற்புதப்புத்திபாசத்
தமரவோர்தந்தமுங்கரிமுகமுமீரிரண்டத்தமுந்துங்கரமுமூன்
றக்கமீர்சழல்களும்மோதகம்மழுமாலையரவிந்தமேந்துவடிவிற்
சந்தமுறுசிந்தாமணிவிநாயகனெனனச்சாற்றுபேரவதாரமாய்ச்
சலித்தரியிவர்ந்தம்முனிவினுக்கிடரினைத்தனையிலாதிழைத்தநனிசீர்த்
தவத்தினின்வலியனுங்கணனைநீகடிந்தவன்றருக்கிறைற்கவர்ந்தவுயிரின்
பந்தமதொழிக்குசிந்தாமணியினையுமப்பரமனடியார்க்குநல்கிப்
பங்கயன்மாலுமோகாணுணுச்சோதியாம்பவற்குகந்தகுமரா
பத்தியோடனுதினம்பரவுவார்தமக்குநேர்பல்விடரைநீக்கிமேலாம்
வந்தைசேர்பரகதிவழங்கிடுங்கருணையின்வள்ளலேசித்தியோங்க
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (21)

## (3) கசானனவிநாயகர்

செங்கமலவாசியின்கொட்டாவிதனில்வந்தசிந்தூரனுமவுணனுஞ்
சீர்சகப்பொருளெலாம்பொடிபடுத்தரவலைச்செல்வனுந்திசைமுகனுமே
திடுக்கிடவொடிக்கிவன்செருக்கினுற்சயிலையிற்றிரிபுராந்தகனோடு
வங்கையுடனமராடுவேனையோர்வேதியன்மகனுகவிருவர்நடுவே
வந்துநின்பரசுதனைநாட்டியவ்வவுணனின்மதமொழித்தெந்தையன்பார்
மலைமாதுவயிறினிற்கருவதாய்வளரவுன்மாசிரசைவவ்வவுணன்
சங்கரன்மதலைநீசிரசிலாமுண்டமர்ய்ச்சனித்துநின்னுடல்காட்டத்
தனிப்பெருங்கசமுகாசுரன்றலைபொருத்தியேதாங்கியேசுசானனப்பேர்
தரியலர்க்கிடியேறுபோலாளியூர்ந்துவெந்தகுவனுஞ்சிந்தூரசூர்
மங்கிடக்குழைத்துமத்தகத்திலிற்பூசியேமன்பதைமகிழவேதான்
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (22)

## (4) விக்கினவிநாயகர்

போகியின்னேவலாலெமருபவிக்கினன்புகழேமவதியரசையும்
புரிந்தசிர்மகத்தையுமழித்துவெஞ்செருக்கினாற்புங்கவர்தவத்தராளோர்
போற்றிடும் யாகங்கள்யாவையும்போக்கிடப்புரந்தரன்றவத்தரன்னோன்
சாகசந்தாங்கிடாதுன்னைவேண்டிடவுநீதந்திமுகநான்குகரமுந்
தனித்துதிக்கையுடன்பராசுவமுனியகந்தங்கிரூர்க்கிரவுஞ்சவின்
சாபத்தைநீக்கிடுங்கருணையாலன்னவன்றூங்கிட்டகோலமாகும்
ஆருவினையூர்ந்துவெமருபியையொடுக்கிநும்மத்தமொளிரங்குசத்தா.
லவனியிடரோட்டிவிக்கினராசரென்னவோரபிதானமேற்றுமேதா
ளுன்மபோகங்களைப்பசுக்களுக்கூட்டியேயவர்பக்வமானபோதே
வாகுகெடவாணவமலத்தினைப்போக்கியாள்வல்லபைக்குகந்தகுருவே
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (23)

## (5) மயூரேசவிநாயகர்

ஆணைமாவானனத்துடனுதித்துயிரெலாமளித்திடும்பரமகுருநீ
யற்புதக்கலாபமூர்ந்தருண்மயூரேசனென்றவனிநனிபோற்றவேதா
னவதரித்தயனுதிதேவருக்கெண்ணிலாவலக்கணைச்செய்தருட்சித்
தானையந்தலைவனுங்கமலாசுரனெனுந்தானவக்குரிசிறன்னைச்
சங்கரித்தின்னுமோர்கற்பத்திலவ்வுருத்தாங்கியுமையம்மையார்க்கே
தகயனுய்த்தோன்றிவெஞ்சிந்துராசன்பெருந்சந்திரத்தலைமைவாய்ந்த
தானவக்குழுவெலாஞ்செகுத்துமவ்வவுணனைச்சமரினிற்றடிந்துமேலோர்
தங்குநீஞ்சிறையினின்றெடுத்துமேயவுணனின்றந்தைச்குமரசளித்தே
சண்முகப்பெருமனுச்குன்றனித்தோகையைத்தந்தகப்பிரமைகொண்ட
மான்மகன்மாலுமேதேடொணுச்சோதியாய்வந்தபிறைருடிமகவாய்
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (24)

## (6) பாலசந்திரவிநாயகர்

தேவமாதரசிதற்றிவோத்தமைவனப்பினிற்றிசைப்பண்டுதேனுவூர்தி
சிந்திட்டவீரியத்துதித்தகதியவுணனுஞ்சிறுமனலாசுரனுமே
செருக்கினுலுயிரெலாம்பொடிபடுத்திடவுமேசெற்றிடவவனையுந்தா
னுவதோர்வகையினைக்காண்கிலாதுன்னையேயவர்கூற்றதஞ்சமென்றே
யணைந்திடப்பின்னுகன்மதலையேயன்றுமோரந்தணச்சிறுவனுருவா
யவணடைந்தகரனைவிழுங்கியவ்வனலுமேயடர்ந்துனைப்பற்றினாற்போற்
பாவனையாகநீபண்ணிடப்பரந்ததேபாருலசனைத்துமந்தோ
பங்கயனமுதலவாந்தேவரும்படிவருமபச்சையறுகர்ச்சனையினாற்
பரவவதுநீங்கிடும்படிசெய்தவாடவாற்பாலசந்திரனென்னுமோர்
மாவரும்பேரினைத்தாங்கிடுந்தாரகாமாயவற்கினியமருகா
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (25)

## (7) தூமகேதுவிநாயகர்

உன்னருள்வசத்திருளுலகளந்தோனுநல்லுயர்தவச்செல்விசுமுதைதக்
குத்தமக்குழவியாயவன்வயின்வளரவேயோங்குபேர்த்தூமகோனன்
றுருவிலாவாகாசவாக்கினிற்றிடுக்கிட்டுறுசெய்திடச்சிசுக்கே
யுன்னிவெவ்விரரைவிடுத்திடத்தானுமோவும்பருங்காணவொண்ணு
வுமையவட்கபர்ந்தசீர்மதலைநீசுமுதைபாலோங்கியோர்பாலனுக்
லூட்டியேயவள்முலைப்பாலவடனக்கிடருறுத்தவங்கணைந்தவீரர்
தன்னையுந்தூமராசனையுநின்வாயெழுந்தனிப்பெரும்புகையினுலே
தடிந்துமன்னேனரசவள்வயின்சலசலோசனற்களித்தவளையவடன்
றவனையுங்காத்துயர்த்தூமகேதென்றபேர்சாற்றியேகருணைநிதியாம்
வன்னமயிலூர்ந்தும்பர்காத்தவற்கண்ணணேமலைமுனிக்குகந்தகுருவே
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (26

## (8) கணேசர் (9) கணபதி

ஏகவெயிறத்தனேபலியினுக்கழிவிலாவெழிலாயுடிரிபுரமுந்
யியவுமிமையவர்க்கெண்ணிலாவிடரினையிழைந்தனனதற்கவருமோ
யேறிவர்தருட்டிரிபுராந்தகன்சரணகத்திருத்திவந்தரற்றிடத்தஞ்
சோகமதையெந்தையுமகற்றுதற்குன்னினன்சோதிமயமானவவரின்
சுந்தரமுகத்தினிற்கணேசரவதாரமாய்த்தோன்றிவெம்பலியைவாட்டத்
தோற்றமதளித்துசிவநேசருக்கெளியனேகடவுளர்க்கிடுக்கணீக்க
வாகுபெறுமிமாசலத்தலைவியோடுமாபதிமகிழ்வுறப்பிரணவத்தின்
வந்தமாகணபதிபபேர்கொளவதாரமாய்வரரிக்கசமுகனைநின்
மாதனிக்கொம்பினுல்வாட்டியன்னேனெழும்வன்பெருச்சாளியான
வாகனமிவர்ந்தரியராவுருப்போக்கியேமதகயமுகத்தினோடு
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (27)

## (10) மதோற்கடவிநாயகர்

மங்கையோர்பங்கனின்வரமிகப்பெற்றவெம்மாயையின்வலியரான
மாவிறற்றேவாந்தகனராந்தகன்செயும்வன்கொடுமைகோறனுக்கே
வானவருமன்பதையுமுன்னையேசரணதாய்வந்தடைந்திடவுமேவெண்
டிங்கள்செஞ்சடையணித்தேவுதன்மதலைநீதிசைமுகனுமாதவனுமே
தேடொணுமதோற்கடரென்னுமவதாரமாய்ச்செவித்துமேகாசிபற்குந்
தெரிவையதிதிக்குநன்மதலையாயன்றுமேசித்திரன்சாபநீக்கித்
தங்குசீர்க்காசியிற்சிறுவரோடாடியேதகவுடன்சித்திபுத்தி
தமைமணந்துறுவலைப்புரிந்தவப்பாதகத்தகுவரோடவர்குழுவையுந்
தடிந்துமத்தலத்தினிற்றராபதிமகற்குமேதருடரோகிதனுகவே
மங்கலவளந்தருபிரணவச்சொரூபியாம்வரதனேயேகனுதா
மன்னுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீடழிந்து
வந்தடைந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (28)

## (11) டுண்டிவிநாயகர் (12) வல்லபைகணேசர்

பிரசுரன்வரச்செருக்கரியரித்திடவவன்பிள்ளையாந்துராசதனுமே
பெருந்தவமியற்றியேபிஞ்ஞகனிடம்வரப்பேற்றினூற்றுதைசெற்ற
பிரமனின்பிதாமுதற்றேவரைவருத்தவேபேரருளுருபமான

வரைமகள்முகத்துடுண்டிராசரவதாரமாய்வந்தவுணனுயிரைநீயும்
வாங்கியோர்கணிதனுய்க்காசிசோத்திவோதவன்மநளறுத்தருந்தவர்க்கே
வரன்காசியுறவாக்கியைங்கரத்தேவவுன்வாமத்திலுற்றவம்மை

சராசரப்பொருடனுலலர்தியங்காதெனத்தருக்கித்துநின்றவதனுற்
சார்ந்திட்டவினையினைப்போக்கவல்லபையெனத்தவன்மரீசிக்குமகளாய்த்
தங்குவேயவணைந்தவளைநீமணத்தலாற்றந்திமுகமானவுருவே

வரதனேவல்லபைகணேசனென்பேரினல்மன்பனைதகன்போற்றவேதான்
மன்றுதிருவாத்தியடிவிக்கினவிநாயகாவல்வினையினீட்டழிந்து
வந்தனைடந்தேனுனைச்சரணுகநானுமேவரமெனக்கருளுவாயே. (29)

திரு. கோ. கணபதிப்பிள்ளை அவர்களால்
1913-ம் ஆண்டில் கோவில்
முதல் மகா கும்பாபிசேகத்தின்போது
பாடப்பெற்றது.



● மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

# ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வரலாறு

துந்துபி வருடம் தை மாதம் 13-ம் நாள் *(1983-01-26)* மிருகசிரிட நட்சத்திரம் சேர்ந்த சுபவேளையில் ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் மங்களகரமாக நிறைவேறிய புனராவர்த்தன கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, இவ்வாலய வரலாறுடன் அடங்கிய மலரொன்று வெளியிடவேண்டுமென்பது ஆத்தியடிப் பிள்ளையார் அருள்மிகு தர்மபரிபாலன சபையினின் அபிப்பிராயமாகும். ஆத்மாக்களின் ஈடேற்றத்துக்காக ஆங்காங்கே ஆலமர, அரசமர நிழலிலும், ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் வீதிகளிலும் வழியிலும் அங்கும், இங்கும் எங்கும் ஆனைமுகத்துடன் தோன்றி அருள்பாலிக்கும் ஈசுவரன் எமது கிராமத்தில் போத்துக்கீசர் காலத்துக்கு முன்பே தோன்றியிருக்கலாமெனக் கருதப்படுகின்றது. ஆரம்பகால தோற்றம் அதற்குப் பின் உள்ள காலங்களின் வரலாற்றை ஒழுங்கான முறையில் அமைத்து கூறக் கிடைக்கும் ஆதாரங்கள் மிகச் சிலவே. எம் முன்னோர் ஏட்டில் எழுதியவையாமையால், இன்று நாம் அவற்றைச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் பரம்பரை பரம்பரையாக பக்தி அன்புடன் இவ்வாலய வழிபாடு, திருப்பணித்தொண்டுகளைச் செய்தோரும், இவ்வாலய வரலாற்றை ஓரளவு அறிந்தவர்களும் விநாயகப் பெருமானின் திருவருள் நோக்கைப் பெற்றவர்கள் எம் மத்தியில் பலர் இருப்பதனால் அவர்களின் திருவாய் மொழிமூலம், இவ்வாலய வரலாற்றைக் கேட்டறிந்தும், பிற்காலத்தில் இருக்கும் குறிப்புக்களிலிருந்தும் பாற்கடலைப் பருகச் சென்ற பூனைபோல் நாமும் ஆத்தியடி விநாயகப் பெருமானின் வரலாற்றையும் அவர் பெருமையையும் அவனருளால் ஏட்டுருவாக்கலாமெனத் துணிந்தோம்.

வரையறுத்துக் கூறிக்கொள்ள முடியாத காலத்தில் சுண்ணாம்பு, செங்கட்டி முதலியவற்றால் கட்டப்பட்ட விநாயக ஆலயம் ஒன்று பருத்தித்துறை புலோலி மேற்கு கட்டாடிச் சீமா வென்றழைக்கப்படும் ஸ்தானத்தில் இருந்ததற்குரிய தடயங்கள் பலவுண்டு. அக்காலத்தில் வசித்த சைவப் பக்தர்கள் அன்னிய ஆட்சியினருக்குப் பயந்து கோவிலில் நித்திய பூசை செய்து வழிபடல் போன்ற கருமங்களை முறைப்படி ஆலயங்களில் செய்யாதொழிந்தனர். ஆனாலும் தமதன்றாட சமய அனுட்டானங்கள், விரதமிருத்தல், போன்ற சைவசமயக் கிருகைகளைக் கைவிடாது, இரகசியமாய் தங்கள் இல்லந்தோறும் செய்து வந்தனர். இவ்வாறான அன்னிய அடக்கு முறையும், சமய சுதந்திரமும் இன்றி இருந்த போர்த்துக்கீசர் காலத்தில், இவ்வூர் விநாயகர் ஆலயமும் பெரும் பாதிப்புக்குள்ளாகி பலவருடங்களாக, சீர்குலைவுற்றது. பின்பு, காலப்போக்கில் சைவசமய வழிபாட்டுக்கு இடையூறு செய்தல் குறைவுற்றுக் கொண்டு வந்தது. இக்கால கட்டத்தில் ஆலய கட்டிடம் செடிகொடிகளாலும் புல் பூண்டுகளாலும் மூடப்பட்டு இருந்தது. விநாயக வழிபாட்டுக்காரர் தம் நிலையை நினைந்து மனதுக்குள் இறைவனை வேண்டி வழிபட்டனர். இக்காலத்தில் தமிழ் மக்கள் வாழும் இடங்கள் எல்லாம் ஆறுமுகநாவலர் போன்ற பெரியார்கள் தோன்றி சைவசமய வழிபாட்டினை மக்களுக்குப் போதித்து, மொழியையும் சமயத்தையும் வளர்ப்பதற்கு அரும்பாடு பட்டனர்.

நாம் செய்த தவப்பயனால் போலும், விநாயகர் மீண்டும் இம்மக்களுக்கு தன்னைக் கனவிலும், குறிப்பாலும் உணர்த்தி, பாழடைந்திருந்த ஆலயத்தின் நடுவே தோன்றிய திருவாத்தி விருஷத்தின் கீழ் தன்னை வழிபாடு செய்யும்படி அருளி நின்றார். மேலும் பலருக்கு தம்மை வெள்ளானை, வெள்ளாணில் ஆதி பல் உருவங்களை சொப்பனத்தில் காட்டி தாம் சொப்பனத்தில் தோன்றத் தெரிவித்தபடி தம்மை வழிபட்டாரை நன்னி சாக்கிரத்தில் இஸ்டசித்தி புத்திகளைக் கொடுத்து வரலாயினர். அது கண்ட கிராமவாசிகள் ஆலயத்தைச் சீர் செய்து திருவாத்தி விருஷத்தின் கீழ் விநாயகப் பெருமானை **''ஆத்தியடிப் பிள்ளையார்''** என்றும் திருநாமம் புனைந்து வழிபடலாயினர்.

இக்காலத்தில் சைவப்பண்பு மரவு தவறாத வேளாள குலந்திலுதித்த வேலாயுத உபாத்தியாயர் அவர்கள் விசேடமாக விநாயக வழிபாட்டில் மிக ஈடுபாடுடையவராக இருந்து வந்தார். அக்காலத்தில் ஆங்கிலேய ஆட்சியாளரால் கோவில் வழிபாட்டுக்கு இடையூறுகளும், கிருஸ்தவ சமயப் பரவலும் கிருஸ்தவ பாடசாலை விஸ்தரிப்பும் வெகு வேகமாகத் தோன்றிக் கொண்டிருந்த காலமாகும். இக்கிராமத்தவர் செய் தவப்பயனால் சைவ வழிபாட்டுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் விநாயகப் பெருமான் தம்மைவழிபடுபவர்களுக்கு இஷ்டசித்திகளை கொடுத்து புதியதோர் ஆலயம் அமைத்து வழிபடும் வண்ணம் அருளா நின்றார் அவ்வருள் நோக்கு பல் உருவில் தோன்றிற்று. அவற்றில் ஓர் இரண்டை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம். விநாய பக்தராகிய ஸ்ரீ. வேலாயுத உபாத்தியார் அவர்கட்கும் மற்றும் பல அடியார்களுக்கும் கனவில் தோன்றி, எறும்புக் குழியும், திருவாத்தித்தருவும் கார் வளப் பெருக்குமே தமது இடமெனக் குறிப்பால் உணர்த்தியும் வால்வைடப்பரதேசியாகிய மகானது அருள்வாக்கு மூலமாகவும்: கட்டாடிச்சிமாவென்னும் ஸ்தானத்திலிருந்து தம்மை திருப்பெயர்ச்சி செய்து வாய்க்காற் புளியடியென்னும் புதிய ஸ்தானத்தில் (தற்கால ஸ்தானம்) பிரதிஷ்டை செய்து வழிபடும்படி பணித்தருளினர். இது ஏறத்தாழ 1860-ம் ஆண்டளவில் நடைபெற்றது.

இப்புதிய ஸ்தானத்தில் கற்பகிரகம் அமையப் பெற்று இருக்கும் இடத்திலேயே, விநாயகரது மூலஸ்தானம் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் சிறிய மண்டபமும் ஓலையினால் வேயப்பட்ட கூரையும், சாணத்தால் மெழுக்கிட்டும், பூக்கள், மாலைகள் புனைந்தும், விநாயகப் பெருமானை வழிபாடு செய்து வந்ததாகத் தெரிகின்றது. இக்காலத்தில, எம்பெருமான் மேல் ஊஞ்சல் பாட்டு முதலியன பாடியருளிய ஸ்ரீமத் மு. தம்பையாக் குருக்கள் அவர்களே கோவில் பூசகராக தொண்டாற்றும் பேற்றினைப் பெற்றவராகும். இவர் ஐயாமுத்துக் குருக்கள் என்ற பெயராலும் அழைக்கப்பட்டு வந்தார். இவர் சொத்திமுத்தர் என்றழைக்கப்படும் முத்தையர் குருக்களின் ஏக புதல்வர் ஆவர். இவர்கள் திருக்கோவிலுக்கு அருகாமையில், தற்போது பூங்கொல்லையிருக்குமிடத்தில், மண்மனை கட்டி குடியிருந்து கொண்டு கோவில் நித்திய. நைமித்திய பூசைகளுடன், கந்தப்புராணப்படிப்பு, பிள்ளையார் கதைப் படிப்பு போன்ற விசேட பூசையையும் வறுமையிலும் எளியமுறையில் பக்தி அன்புடன் ஊர் மக்களுடன் சேர்ந்து செய்து வரலாயினர்.

மீண்டும் ஆலயம் சீரணமடையக் கண்ட இவ்வூர் மக்கள், 1901-ம் ஆண்டு பங்குனி மாதம் 30-ம் திகதி பாலஸ்தாபனம் செய்து, அன்றைய தினத்திலேயே புதியதாக திருக்கோவில் கட்டுவதற்கு அடிக்கல்லும் நாட்டினர். தற்போதுள்ள மடப்பள்ளி அறைக்கு அருகாமையில் தெற்கே நின்ற மாமரத்தின் கீழ் தற்காலிகமாக அமைக்கப்பெற்ற கொட்டிலில் பாலஸ்தாபனம் செய்தனர்.

இவ்வூர் பிரமுகர்கள் பலர் திரு சந்திரசேகர் சபாபதிப்பிள்ளை (சின்னவியார்) அவர்களின் தலைமையில் கூடி முதன்முதலாக, கோவில் திருப்பணி வேலைகளையும், கும்பாபிஷேகத்தையும் மற்றும் நித்திய நைமித்திய பூசைகளைச் செய்வதற்கும், "ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தரும பரிபாலன சபை" யென்னும் மகாசபையை நிறுவினர். இம்மகாசபையால் ஓர் நிருவாக சபையும், கோவில் முகாமையாளரையும் தெரிவுசெய்து சபைப் பிரமாணங்களையும் ஆக்கினர். திரு. நீ ரயினர் கந்தப்பர் வேற்பிள்ளை அவர்கள், தம்மிடம் நிருவாக சபையினரால் ஒப்படைக்கப்பெற்ற கோவில் பரிபாலன அலுவல்களையும், முகாமையாளர் பதவியையும் ஒப்பேற்று, ஏறத்தாழ 13 வருடங்கள் வரை, புதிய கோவில் திருப்பணிக் கட்டிடவேலைகளைச் செய்து, சைவ ஆகம விதி முறைப்படி பிரமாதீச வருஷம், கார்த்திகைத் திங்கள் 23 நாள் (1913ம் ஆண்டு) திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு மேல் மீனலக்கின; ரேவதி நட்சத்திரத்தில் கூடிய சுபமுகூர்த்தவேளையில் மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தார் அன்று தொட்டு இன்றுவரை இச் சுபமுகூர்த்த திதியில் வருடாவருடம், எம்பெருமான் ஆலயத்தில் மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெற்று வருவது

குறிப்பிடற்பாலதாகும். முதலாவது கும்பாபிஷேகத்தின் பின் ஸ்ரீமத் தம்மையாக்குருக்களின் சிரேஷ்ட புத்திரராகிய தர்மலிங்கக் குருக்கள் நித்திய பூசைகளைச் செய்து வந்தார். இவ்வாறாக மற்றும், பத்து நாள் அலங்காரத்திருவிழா, கந்தசஷ்டி, திருவெம்பாவை, நவராத்திரி, சிவராத்திரி போன்ற விசேட பூசைகளும் ஒழுங்காக நடைபெற்று வந்துள்ளன. திரு. கோ. கணபதிப்பிள்ளை (ஜுவீலர்) அவர்களே திருவிழாவிற்கு வேண்டிய எழுந்தருளி விக்கிரகங்களாகிய விநாயகர் சுப்பிரமணியர், தெய்வானைஅம்மன், வள்ளியம்மை ஆகியவற்றை செய்யும் பேற்றைப் பெற்றவரும் விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள் மேல் பதிகம் பாடிய வருமாவார். திரு. நீ க. வேற்பிள்ளை அவர்கள் 1904-ம் ஆண்டிலிருந்து கோவில் பரிபாலனத்தை சுமார் 40 ஆண்டுகள் வரை சிறப்புற நடத்தி வரலாயினர். தமது மூப்பின் காரணமாக மேலும் தொடர்ந்து தொண்டாற்ற முடியாமையால், தம் பணியை, 1941-ம் ஆண்டில் திரு. ச. சோ. சரவணமுத்து அவர்களிடம் ஒப்படைத்து பின் சிறிது காலத்தில் இறையடியெய்தினர்.

1941-ம் ஆண்டு யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் அனைக்கப்பட்ட நடுநிலைமைக் குழுவின் தீர்ப்புகளுக்கு இணங்க 1941-12-27ம் திகதி மகா சபை மீண்டும் மு. சு. கந்தையா பிறக்டர். அவர்களின் தலைமையில் கூடியது, இம்மகாசபை, திரு. நா. வேலுப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும், திரு. க. தம்பிராசா திரு வேபரஞ்சோதி ஆகிய இருவரையும் உபதலைவர்களாகவும், திரு க. வேல்முருகு அவர்களைக் காரியதரிசியாகவும், திரு. ச. சிவகுருநாதரைப் பொருளாளராகவும், திரு. ச. சோ. சரவணமுத்து அவர்களை முகாமையாளராகவும் தெரிவு செய்தது.

இவர்கள் சுபானு வருடம் பங்குனித் திங்களில் (1943-ம் ஆண்டு) பாலஸ்தாபனம் செய்து பெரிதளவான கட்டிட நிர்மாண வேலைகளையும் நிறைவேற்றி, தாரண வருஷம் ஆனித்திங்கள் 27-ம் நாள் (1944-ம் ஆண்டு) இரண்டாவது தடவையாக. ஸ்ரீ முத்துச் சுவாமிக்குருக்கள் தலைமையில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகத்தை மங்களகரமாக நிறைவேற்றினர்,

வியய வருஷ ஆரம்பத்தில் (1946-ம் ஆண்டு விநாயகப் பெருமானை அலங்காரத் திருவிழா செய்து வழிபடும் முறை கொடியேற்றத் திருவிழாவாக அமைய, மேலும் எம்பெருமானின் அருள் கூடியது திரு ச. சோ. சரவணமுத்து அவர்கள் கொடிதம்பஸ்தாபனத்தையும், ஸ்ரீ சபாபதி தேசிகர் (குருக்கள்) யாகசாலை அமைக்கும் பொறுப்பையும் ஏற்றுச் செய்தனர். இவ்வாண்டிலேயே ஸ்தம்ப மண்டபமும் ஓடுகளால் வேயப்படும் திருப்பணி வேலையும் நடைபெற்றது. வழமையாக, வைகாசி பௌர்ணமியில் நிறைவுற நடைபெற்று வந்த அலங்கார உற்சவம், வியய வருஷத்தில் (1946-ல்) ஆனித்திங்கள் பூர்வபக்க ஷஷ்டியில் திரு. ச. சிவகுருநாதர் அவர்களால் முதலாவது கொடியேற்ற விழா ஆரம்பிக்கப்பட்டு, திருவாளர்கள், நா. வேலுப்பிள்ளை, க. கு. பிறைகுடி, இராமுவல்லிபுரம், மு. சங்கரப்பிள்ளை, வ சிவசுந்தரம், ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிச்சங்கம், ச. வேல்முருகு, க. வேலுப்பிள்ளை (தேர்) பொ. வேலுப்பிள்ளை (தீர்த்தம்) ஆகியோர்களால் நடத்தப் பெற்று ஆனிப் பௌர்ணமியில் அவ்வாண்டு தீர்த்தோற்சவம் இனிது நிறைவேறியது. இதன்பின் கொடியேற்றத்திருவிழா வைகாசி பூர்வபக்க ஷஷ்டியில் ஆரம்பமாகி பௌர்ணமியில் தீர்த்த உற்சவம் அமையும் வண்ணம் சைவாகம விதி முறை தவறாது ஒழுங்காக நடைபெறுகின்றது.

திரு. சங்கரப்பிள்ளை முருகேசு, திருமதி இலட்சுமிப்பிள்ளை இராமசாமி, திரு. த. வே. தாமோதரம், திரு. நா. வேலுப்பிள்ளை, அவரது பாரியார் திருமதி மனோன்மணி வேலுப்பிள்ளை, திரு. ச சோ. சரவணமுத்து, திரு. க. வேல்முருகு, திருமதி சிதேவிப்பிள்ளை குழந்தைவேலு திரு. க. வேலுப்பிள்ளை அவரது பாரியார் திருமதி அன்னபூரணம் வேலுப்பிள்ளை, திரு ச. சிவகுருநாதர் திரு. சே. கிருஷ்ணசிங்கம், திரு. சோ. ச சோமசுந்தரம் ஆகிய விநாய பக்தர்களாலும் மற்றும் பல அடியார்களாலும் காலத்துக்கு காலம், இற்றைவரை இத்திருவாலயத்தின்

உள்வீதி மண்டபங்கள், வெளி மண்டபங்கள் கூரை வேலைகள், தூண்கள், சுவர்கள் பூச்சுப் பூசல் போன்ற திருப்பணி வேலைகள் விநாயகனருளால் இனிது நடைபெற்று வருகின்றன.

*1950*-ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து *10* வருடத்துக்கு மேல், ஸ்ரீ, ல. ஸ்ரீ. து. சிவசிதம்பரக்குருக்கள் இவ்வாலய அர்ச்சகராக சிறப்பாக தொண்டாற்றி வந்துள்ளமையும், அவருடைய கண்ணியம், கட்டுப்பாடு. ஆகிய குணாதிசயங்களையும் போற்றுதாரில்லை எனத்துணிந்து கூறலாம். இத்தருணத்தில் காலம் சென்ற சைவப்பெரியார் திரு. சண்முகம் குழந்தைவேலு திரு. க. வேல்முருகு ஆகியோருடைய தொண்டைப் பற்றிக் குறிப்பிடுவதும் அவசியமாகும். அப்பெரியார்கள் இக் கோவிலின் நித்திய, நைமித்திய விசேட திருவிழா பூசைகள் முதலியன சிறப்புற நடப்பதற்கும், சிவாகம விதிமுறைகள் தவறாது நடப்பதற்கு வேண்டிய அறிவு பெற்றவர்களாய் விளங்கி இவ்வாலயத்தின் சகல காரியங்களிலும், முன்நின்று வழி நடத்தியும்; சைவாக விதி முறை தவறாது நடைபெறவும்; பல்லாண்டு ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். *1960* ஆண்டளவில் புதிய கொடித்தம்பம் திரு. முருகேசு சண்முகம்பிள்ளை அவர்களின் உபகரிப்பில் நாட்டப்பெற்றுள்ளது. *1960*-ம் ஆண்டுக்குப்பின் பல குருக்கள் சிறிய காலத்துக்கு மட்டும் அர்ச்சகராககடமைபுரிந்து வந்துள்ளனர். *1964*-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் *01*-ம் நாளிலிருந்து ஸ்ரீலஸ்ரீ சதா. சிதம்பரப்பிள்ளைக்குருக்கள் இன்றுவரை மிகச் சிறப்பாக ஒழுங்கான முறையில் ஆலய அர்ச்சகராக கடமை புரிந்து வருகின்றார். இவர் மேலும் பல்லாண்டு சுகசௌகரியங்களுடன் வாழ்ந்து தம்பணியைச் செய்ய எம் விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

பராபவ வருஷம் சித்திரைத்திங்கள் 25-ம் நாள் விநாயகப் பெருமானின் பாலஸ்தாபனம் மீண்டும் நடைபெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து பிலவங்க வருஷம் சித்திரை திங்களில் கூடிய மக நட்சத்திரத்தில் *(1967-04-20)* ஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள் தலைமையில். விநாயக அடியவராகிய சோ. ச. சோமசுந்தரம் அவர்கள் மூன்றுவது மகா கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கும் அருளைப் பெற்றவராயினர். *1972*-ல், திரு. இ. உருத்திரா (புறக்டர்) அவர்கள் புதியதோர் விநாயக எழுந்தருளியை செய்து உபகரித்துள்ளார்.

*1977*-ல் விநாயகப் பெருமானின் அடியார்களின் உதவியோடு, திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை, திருமதி அன்னபூரணம் வேலுப்பிள்ளை, இவர்களினுடைய புத்திரன் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பெரும் முயற்சியின் பயனாக, புதிய அழகிய சித்திரத்தேர் உருவாகியது. *29-05-77* இல் வெள்ளோட்டம் நடைபெற்று *1977*-ம் ஆண்டிலிருந்து விநாயகப் பெருமான் வருடம் தோறும் மகோ உற்சவ தேர் விழாவன்று இச் சித்திரத்தேரில் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆத்தியடிப்பிள்ளையார் கோவில் தரும பரிபாலன சபையில் நூற்றுக்கணக்கான விநாயக வழிபாட்டுக்காரர் அங்கத்தவர்களாக இருந்து வருகின்றனர். இம்மகா சபை வருடம் தோறும் சித்திரைத் திங்களில் கூடி ஆலய நாளாந்த, விசேட பூசைகள், திருபபணி வேலைகள், சிறப்பாக நடப்பதற்கு ஓர் செயற்குழுவைத் தெரிவு செய்வர்.

எம்பெருமான் அருளால் இவ்வாண்டில், எமது சபைத்தலைவர் திரு. ச. சிவராமலிங்கம் அவர்களின் வழிநடத்தலின் கீழ் துந்துபி வருஷம் சித்திரைத் திங்கள்*13*-ம்நாள்காவது *(26-4-82)* பாலஸ்தாபனம் செய்து, நான் மகா கும்பாபிஷேகத்தை நிகழும் துந்துபி வருடம் தைமாதம் *13*-ம் நாள் *(26-1-83)* இனிது நிறைவேற்றும். பேற்றை இச்சபை பெறுகின்றது. இதை செவ்வனே நடத்தி வைக்கும் பேற்றை எமது ஆலய முகாமையாளர் க. சண்முகநாதன் பெறுகின்றார்.

ஆத்தியடி விநாயகரை நினைத்து, வணங்கிவிட்டு எக்காரியங்களையும் ஆரம்பித்து பழக்கப்பட்ட நாம், இச்சந்தர்ப்பத்தில் அவரது உருவைப் பற்றி சிறிது நினைவு கூர்வோம் விக்ன விநாயகனின் உருவில் கணக்கில்லாத சிறப்புக்களைக் காண்கிறோம், விநாயகர் விசுவரூபம் வெண்டவர். பஞ்ச கணங்களான நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றின் அதிபதி எனவே தான் அவரை மகா கணபதி என அழைக்கின்றோம். சூரிய சந்திர கிரகங்கள் ஒரு குறிப்பிட்ட வழியில் நின்று சுழலும் தத்து

வத்தை. ஒரு சிறிய எலிமீது யானையின் உருவில் அமர்ந்து செல்லும் அதிசயத்தால் அறிவுறுத்துகின்றார். சகல இயக் கங்களுக்கு தானே காரணம் என்பதையும் எடுத்துக் காட்டுகிறார் விநாயகர். யானையை அடக்க அங்குசத்தைப் பயன்படுத்துவது போல உலக மாயையில் மனம் செல்லாது அடக்கும் சக்தியும், மனோதிடமும் வேண்டு மென்று விநாயகர் தெரிவிக்கின்றார். எல் லோரும் தர்ம நியாயங்களுக்கு கட்டுப்பட்டு இருக்கவேண்டுமென தன் கையில் உள்ள பாசக்கயிற்றால் தெரிவிக்கின்றார். அவரது கலசம் நிறைகுடம் போல், தளம்பாமல் அடக்கமாக இருக்கப் பழகவேண்டுமென நினைவுபடுத்துகின்றது. கோடரி, இன்னல் களைப் போக்கும் சின்னமாகவும் அவரது பரந்த செவி உலகில் ஏற்படும் சிறிய பெரிய ஒலிகள் எல்லாம் தன்னுள் இழுத்து அறிந்து கொள்ளுகின்றதென்பதையும், யானைக்கண் சிறிதானாலும் எல்லாவற்றையும் நன்கு பார்க்க வல்லது. எனவே அவர் அணுவில் இருந்து பிரமாண்டம் வரை கூர்ந்து கவனித் துக் கொண்டிருக்கிறார். என்பதை விளக்கு கின்றது. ஐந்தாவது வேதமாகிய பாரதத்தை எழுதி உலகுக்கு அளித்தவர் விநாயகப் பெருமானே ஆகும். இப்படிப்பட்டவரின் அருமை பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூற எம்மால் எப்படி முடியும். யானையாக வும் யானையை அடக்குபவராகவும் இருப் பவர் விநாயகரே. ஆகவே எல்லாம் தன் னுள் அடங்கும் என்பதை தெளிவுபடுத்தும் ஆத்தியடி விநாயகரே எம்மையும் தன்னுள் அடக்கி இவ்வாலய வரலாற்றையும் எழுது வித்தவராவர். ஆகவே நாம் எல்லோரும் ஆத்தியடிப் பிள்ளையாரைத் துதித்து இன் னல் எதுவும் இல்லாதிருக்க அவனடி பணி வோமாக.

ஆ. குமாரசாமி
ஆ. சிவபாதசுந்தரம்

● "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"
— குறள்

# ஆத்தியடிச் சுப்பிரமணியர்மேற்
# பதிகம்

### காப்பு

கங்கைமதிச் செஞ்சடையோன் கட்பொறியில் வந்தநாட்
டங்கு சரவணத்துச் சண்முகன்மேற் - பங்கமிலா
திப்பதிக முற்றடைய வீசனரு டந்திமுகன்
செப்புசரண் காப்புச் செகம்.

திருவதனமிருமூன்றுமீராறுதோளுஞ்சினத்தவடிவேலபயமுஞ்
சிலைமுகமுமங்குசம்வச்சிரங்கொடியோடுசிலைதண்டுமழுபங்கயம்
வரதமொடுமணியேறுபன்னிருகரங்களும்வலமிடந்தேவிமாரும்
வந்திடுங்கோலமேகாட்டியென்னையாளுவாய்வந்தவடியாரவர்க்கு
வரமருளுமுருகேசவள்ளலேதாரகனைவாட்டியருளும்பர்கோனே
வல்வினையினேனலைமார்கலியினலையுண்டுவாட்டமுறலறிகிலாயோ
கரிமுகற்குற்றவொருவொருதம்பியேதிங்களணிகண்ணுதற்கினியமைந்தா
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (1)

நீரினிற்குமிழன்னநிலையற்றகாயத்தைநிலையெனக்கருதிநாளும்
நித்தனேமுற்பவத்தொடர்பிலோமற்றெதோநெஞ்சினிற்கொண்டவெல்லாம்
பாரினிற்செய்துமேபாவியென்றுலகிற்பகர்ந்திடும்பரிசுபெற்ற
பதடிக்குளாக்கிறைப்பண்ணவர்க்கிறைவனேபத்தர்கட்குற்றவினையை
வேரோடழித்திட்டவேற்படைக்குரவனேவேதனுக்கன்றுதித்த
வீண்செருக்கோட்டியேபிரணவப்பொருடன்னைவிமலர்க்குரைத்தமுதல்வா
கார்குழற்றெய்வதத்தையலைக்குறமகட்கன்னியைமணந்ததலைவா
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (2)

உன்னைநானென்றுமுள்ளுருகிவந்தனைபுரிந்துன்னரியவாறெழுத்தை
உச்சரித்துனதன்பர்கூட்டத்தைநாடவுமுன்னடித்தொண்டுசெயவும்
பன்னுதமிழ்பாடிடுஞ்சத்தியுந்துன்பங்களடராதவின்பத்தையும்
பல்வளத்தோடுசுகசீவனப்பெருமையும்பகைவர்வந்தடிபணிந்து
நன்னயம்பேசிடுந்தலைமையும்மன்னர்நல்வசிகரப்பேறுமிதய
நண்பர்சேய்மனையாதியோர்க்குமன்னம்நயந்திடும்பவுழ்கதானும்
கன்னல்வின்மதனனைக்காய்ந்தசிவபாலனேகாசினியிலெற்கருளுவாய்
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தாமிக்கடவுளே. (3)

பன்னிருபுயத்தனேபங்கயாசனனன்றுபகரொணாப்பிரணவத்தைப்
பரமற்குரைத்திட்டபகவனேமலைமாதுபாலனேகார்த்திகேயா
என்னிருகண்மணியானகுமரவேளேமுருகவீசற்குகந்தமைந்தா
யினியமான்மருகனேயிபமுதற்காரணற்கிளையகுறிஞ்சிவேந்தா
வன்னமயிலூர்ந்துவெஞ்சூருரங்கிழியவேவடிவேலைவாங்குமுதல்வா
வாகுடன்செல்வமுங்கல்விகலைஞானமும்வளர்போகமாயுளுஞ்சீர்க்
கன்னிகர்புயங்களுந்தந்தென்னையாளுவாய்கருணாகரத்தெய்வமாய்க்
கவினாத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (4)

பொன்னகர்க்கிறைமகன்சூர்ச்சிறைப்பட்டுவெம்பொருமலைக்கேட்டிரங்கிப்
போந்துமேயஞ்சலென்றபயமீந்தவனுநீபோதியிற்குகையகத்து
மன்குரிசில்நக்கீரனாற்றுப்படைக்கவன்வன்சிறையைநீக்கியாண்ட
வல்லவொருதேவுநீஞானமொடுகல்விகலையவ்வைக்ககத்தியற்குச்

சொன்னவடிதரிசனநீவள்ளியைத்தினைவனஞ்சோர்வுசெய்வேடனும்நீ
சூருடல்கிழித்திட்டவெற்றிவேற்பெருமனித்தோகையிலிவர்ந்துதெய்வக்
கன்னியைமணந்தமரரிடர்தீர்த்தகுமரனேகடையனேனிடர்தவிர்ப்பாய்
கவிஞத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (5)

செந்திவேள்முருகாதிருப்பரங்குன்றனேதிருவேரகத்திலமருஞ்
சிற்பரக்குழகனேதிருவாவினன்குடிச்சின்மயானந்தவடிவே
வந்தவடியார்க்கருள்வழங்குகாங்கேயனேவரைபகலெறிந்தகுமரா
வானவர்கடொழுநின்றவன்னமயில்வாகனாவள்ளியைத்திருடிநீலக்
கந்தமலர்தணிகைமலைசார்தெய்வயானைநற்காந்தாகுறிஞ்சிவேந்தா
கணபதிக்கிளையவாகுன்றுதோறாடலிற்கருணையொடமர்ந்தகுகனே
கந்துகம்பூட்டுநேர்ச்சேவலங்கொடியனேகழலையென்றலைசூட்டுவாய்
கவிஞத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (6)

எந்தநாளுன்னருட்சிந்துவின்மூழ்குவேனேழையேன்செய்தபாவ
மேகுநாளுள்ளதோவுன்னடிப்போதுநாளென்றதான்புனைவனந்தோ
சந்ததமிடர்க்கடற்பட்டுநானலையவுஞ்சண்டனுக்காளாகவே
தற்காத்திடற்குனக்கன்புசற்றில்லையோசாமிநீயறியாததோ
பந்தமதரிந்திடும்பாகவனியல்லையோபராபரச்சோதிவடிவே
பண்ணவர்க்கருளுதவுமறுமுகத்தண்ணலேபத்தர்கட்குற்றகுருவே
கந்தவகையைந்தினுங்கட்டுண்டுமாயாதுகருணைநந்தெனையாளுவாய்
கவிஞத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (7)

தாயிலாக்கன்றதைப்போலிலைகுலைந்துளந்தனித்திடுந்தனியன்யானுந்
தாவிப்படர்ந்திடக்கொழுகொம்பிலாதநனிக்கொடிநிகர்த்தீண்டுலைந்து
தீயிவிற்பட்டதோர்மெழுகுபோலென்றுமசிந்தைமிககுருகியந்தோ
திகைத்துநின்றிடவுமுன்னருளதைக்காட்டிலாய்சிறியனேற்குய்வுமுண்டோ
நாயினுங்கடையனாய்நானிலத்தலையவோநாயகாவென்னைவிதித்தாய்
நாகருக்குற்றவெவ்விடரினைப்போக்குமாறுநாங்கள்கொள்ளறுமுகத்தோய்
காயமாருயிரினுக்குயிராகிநின்றுமேகன்மவனுப்பாசமோட்டுங்
கவிஞத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (8)

தந்தைதாய்குருதெய்வமுனையன்றியிந்தச்சகத்துமிசைவேறுமுண்டோ
கருதிநீதனுகரணபுவனபோகங்களைச்சாருயிர்க்கன்பபேருய்
வந்திடும்பாசமலநீக்கிடுங்கருணையின்மாயையாலவையுமந்தோ
வரவோடுபோக்குறும்மியல்பவல்லாலின்னுமற்றுமோர்நிலையவாமோ
இந்தையதழுங்கிநின்றிங்ஙனமரற்றிடச்சித்தநிற்குண்டுகொல்லோ
சிவசுதாவெளியனேன்செய்பவப்பிழையபவேசீர்பாதமீந்தருளுவாய்
கந்திமாகதலிவாய்வாய்க்காற்புளியடிக்கற்பகக்தாருநேர்ந்த
கவிஞத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (9)

சரவணதடாகத்தமர்ந்தாறுகார்த்திகைத்தாய்முலைப்பாலருந்தித்
தனித்தவடிவேற்குலிசமாதியாம்படையினைத்தாங்கியச்சூரனோடு
பொருதவனைவாட்டியுன்பாதமலர்சூட்டியும்புனிதர்சிறைமீட்டுமன்றோர்
பூங்கழற்றெய்வதக்கனிநினைமணந்தரும்புணரிவாய்ச்செந்திவந்து
திருநிகர்ச்சுந்தரப்பிராட்டியாம்வள்ளியைத்திருவதுவைசெய்துவேடர்
சீர்க்குலம்வாழ்ந்திடச்செய்ததுமுனக்கியற்றிருவருட்பெருமையன்றோ
கரியமால்பிரமனுந்தேடொணுச்சோதியாங்கண்ணுதற்றந்தகுமரா
கவிஞத்தியந்தளியின்வடபாலமர்ந்தருளுகந்தசாமிக்கடவுளே. (10)

முற்றிற்று.

திரு. கோ. கணபதிப்பிள்ளை அவர்களால்
1913-ம் ஆண்டில் கோவில்
முதல் மகா கும்பாபிசேகத்தின்போது
பாடப்பெற்றது.

# சனீஸ்வரன்

ஆத்மாக்கள் நித்திய பேரின்பத்தை அடைய வேண்டுமாயின் பந்த பாச இன்பதுன்ப நிலைகளிலிருந்து விடுபட்டு பரிசுத்தம் அடையவேண்டும் என்பதே சமயங்களில் போதிக்கப்படும் உண்மை. ஜீவாத்மாக்கள் பரிசுத்தமடையும் வரை பிறவி எடுத்தேயாக வேண்டும். பிறப்பெடுத்த ஆத்மாக்களுக்கு விக்கினங்களைத் தருவதும், களைவதுமான தொழிலைப்புரியும் மாபெரும் சக்தியே விக்கினேஸ்வரன். விக்கினேஸ்வரன் பிறப்பெடுத்த ஆத்மாக்களுக்கு இவ்வுலக இன்பதுன்பங்களைத் தருபவரும் போக்குபவருமாவர். இவ்வுலக வாழ்வுக்கு, அப்பால் நித்திய பேரின்ப வாழ்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு பிறவித்துயரைத் தருவதும், களைவதுமாகிய தொழில்களைச் செய்யும் சக்தியே சனீஸ்வரனாகும். ஈஸ்வரனது இரு பெரும் அம்சங்களே விக்கினேஸ்வரனும், சனீஸ்வரனுமாகும். சனீஸ்வரனின் அருள் இல்லார்க்கு அவ்வுலகும், விக்கினேஸ்வரின் அருள் இல்லாற்கு இவ்வுலகும்மில்லையாகும். பிறவிக்கே காரணமானவரும் பிறவிநோக்கு மருந்தாக அமைபவரும் சனீஸ்வரனே ஆவர்.

சனீஸ்வரன் என்னும் கிரகம் 75,0000 விட்டமும் பூமியிலும் 700 பங்கு கூடியதுமாகும். சூரியனுக்கும் இதற்கும் உள்ள இடைத்தூரம் 886 கோடி மைல்களாகும். சனீஸ்வரன் சூரியனைச் சுற்றிவர 30 ஆண்டுகள் ஆகின்றன.

சனீஸ்வரனின் தோற்றத்தைப் பற்றி மிகவும் சுவையுள்ளதும், பொருள் பதிந்ததுமான புராணக் கதைகள் பலவுண்டு. ஒரு சமயம் சூரியனின் வெப்பம் தாங்க முடியாமல் அவர் பத்தினியாகிய சம்ஞா தேவி, தனது சாயலை உருவாக்கிவிட்டு மறைந்திருந்ததாகவும் அவ்வமயம் சூரியபகவான் சாயாதேவியை தனது பத்தினியெனக் கருதி சேர்ந்ததால் உற்பவித்தவர் சனீபகவனே என்பர். சனீஸ்வரன் கருநிற முடையவர். கறுப்பு வஸ்திரம் அணிபவர். வில்வடிவ ஆசனத்தில் அமர்பவர். காகத்தை வாகனமாக கொண்டவர். இடப, துலா இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு மிக்க யோகத்தையும், மிதுன, கன்னி, மகர குடும்பம் ஆகிய இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு சமயோகத்தையும், கடக சிங்க மேட விருச்சிக இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு கஸ்டங்களையும் தனு மீன இலக்கினகாறர்களுக்கு சுமாரான, பலனையும் கொடுப்பவர் சனீஸ்வரன் என்பது சோதிட சாஸ்திரமாகும்.

சூரியபகவான் சனீஸ்வரனின் ஆதிக்கத்துக்குட்பட்டபோது, சனீஸ்வரன் தன் பிதாவையே வலிய நோகுடன் பார்க்கவே சூரியபகவானுக்கு குஸ்டரோகம் ஏற்பட்டதாகவும் அவ்வேதனையைத் தாங்கமுடியாத சூரிய பகவான் கோபங்கொண்டு தன் மைந்தனைத் தூக்கி வெகுதூரம் எறிந்த

தாகவும், அதன் காரணமாகவே சனீஸ்வரனுக்கு முடம் ஏற்பட்டு மந்த கதியில், சுற்றி வருவதாகவும், இச் சம்பவத்தினாலேயே இவ்விருவருக்கும் பகைமையுண்டாகியதாக புராணங்கள் கூறுகின்றன. சனீஸ்வரன் தேவர்களையும், முனிவர்களையும் அவதார புருடர்களையும், அரசர்களையும் கூட விட்டதில்லை. ஆதலால் இவருடைய கோபத்துக்கு ஆளாகத் துணிந்தவர் எவருமே இல்லை. இப்புராணக் கதைகளுக்கெல்லாம் உள் தத்துவங்கள் பலவுண்டு. தத்துவக் கருத்துக்களை ஒவ்வோர் ஆத்மாக்களும் அவரவர் பக்குவ நிலைக்கேற்ப அறிந்து கொள்ளலாம். பிரமம் மாயையில் சிக்கியே பிறவியேற்படுகின்றது. பிறவியை அறுப்பதற்கு உலக ஈடுபாடும் துன்பங்களும் மருந்தாகின்றன. உலக ஈடுபாடு இன்பதுன்பங்களை விலக்குபவன் விக்கினேஸ்வரன் போல் பிறப்பிற்கு, பிறவித்துயரிற்கு பிராணனுக்கு ஆயிசுக்கு மரணத்துக்கு காரகன் சனீஸ்வரனே ஆவன். சனியென்றால், துஸ்டன், கெட்டவன், பாழ்பட்ட சனியன் என்னைப்பிடித்து ஆட்டுகின்றது என்று தவறுதலான கருத்துக்களால் சாதாரண மக்களன்றி கல்வி கற்றோரும். பேசக் காண்கின்றோம். ஆனால் உண்மையதுவல்ல. விக்கினேஸ்வரனை வணங்கி இவ்வுலக சௌபாக்கியங்களை நாம் பெற்றுக்கொள்வது போல சனீஸ்வரனை வணங்கி பிறப்பற்ற பேரின்பமாகிய முத்திப் பேற்றை எளிதில் அடையலாம். இந்து வைஷ்ணவ சமயத்தவர்கள் சனிதோஷம் நீங்குவதற்கு கோவிலில் எள்ளெண்ணை எரித்து புரட்டாதி மாதம் சனிக்கிழமை விரதம் அனுஷ்டித்து அவரை அர்ச்சிக்கின்றனர். அவரவர் செய்வினைக்கேற்ப பாக்கியங்களையும் கஸ்டங்களையும் கொடுத்து உலக இச்சாபாசங்களிலிருந்து விடுவித்து இறுதியில் நித்திய இன்பமாகிய முத்திப பேற்றை நல்கும் சனீஸ்வரனை நாம் என்றென்றும் வணங்கி அவன் அருள் பெறுவோமாக.

**சோ. சிவசக்தி**

---

● அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

— சிவஞானபோதம்

# ஊஞ்சல்

## காப்பு

மாமேவுசெல்வநிறைபுலோலிமேற்கார்வளம்பதிவாய்க்காற்புளியடிஇயென்றோதும்
பூமேவுசித்தியுறுமிலையற்புதங்களும்பொலிந்திலகுமாத்தியடித்தளியின்மேவுந்
தூமேவுமேகவெண்கோட்டைங்கரத்தும்பிமுகச்சித்திவிநாயகரின்மீது
பாமேவுமூஞ்சலிசைசாடவன்னோன்பாதமலரிணைபரவிப்பணிகுவோம்.

சீரார்ந்தநாதவிந்துதூண்களாகத்திருவார்ந்தசத்தியொளிர்விட்டமாகப்
பேரார்ந்தசிவாகமங்களிழையதாகப் பீடார்ந்தசதுர்மறையுங்கயிறதாக
ஏரார்ந்தமறையுளர்த்தம்பலகையாக எழிலார்ந்தவோங்காரபீடமேவித்
தேரார்ந்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (1)

தோடாருமலராத்திமாலைசூட்டுஞ் சோதிபெறுதிருமுடியின்மகுடமின்னக்
கோடார்ந்தகிம்புரிப்பூணிவிதுமின்னக் குணமார்ந்தகிருநுதலிற்பட்டமின்னப்
பீடார்ந்தமணிவலயம்புயத்தின்மின்னப் பெருமைசெறிதிருமார்பின்மதாணிமின்னச்
சேடார்ந்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (2)

ஆய்ந்திடுபன்முனிவர்மறையோதியாட வந்தரமாரமார்துதிகூறியாட
வாய்ந்திடுபண்காந்தருவர்பாடியாட வானரம்பைமுதன்மகளிர்கூடியாடப்
பாய்ந்திடுநீருவிவிழிப்பத்தராடப் பன்னுகுறட்படைவீரர்பாங்கிலாடச்
சேர்ந்திடுபூவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (3)

அணிவளர்வெண்மதிமுடியீராடீரூஞ்சல் அம்பரத்தோர்துதியடியீராடீரூஞ்சல்
பணிவளர்பொற்கச்சாரேயாடீரூஞ்சல் பரவுமுயிர்க்கச்சாரேயாடீரூஞ்சல்
மணிவளர்செஞ்சடையாரேயாடீரூஞ்சல் மாலினர்கொஞ்சடையாரேயாடீரூஞ்சல்
திணிவளர்பூவாத்தியடிக்கோ யின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (4)

ஏர்பூத்தபொன்னுலகத்தமரர்கங்களேற்றமளித்தங்கவரையேவல்கொண்ட
பேர்பூத்தகயமுகத்துக்கயவனோடுபெரும்போர்செய்தொருகனதுமருப்பொடித்துத்
தார்பூத்தவாகமதிலெறிந்துவீட்டித் தானவன்மூடிகமாவூர்தியாக்கிச்
சீர்பூத்தவாத்தியடிக்கோயின்மேவுஞ் சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல் (5)

கொம்மைசெறிமுலையுமையாண்மகிழ்ந்துபெற்ற கும்பிமுகப்புத்திரரேயாடீரூஞ்சல்
வெம்மைசெறியிராவணன்கொளிலிங் கங்கொள்ளவேதியனாங்குத்திரரேயாடீரூஞ்சல்
அம்மைசெறிமலாடியையன்பிற்போற்றுமடியருக்குமித்திரரேயாடீரூஞ்சல்
செம்மைமலராத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (6)

வாரணிந்தமலையனையமுலையினாளாம் வல்லபையையிருத்தியருள்வாமத்தாரே
ஏரணிந்தவாடகப்பொனுத்திபூத்தகவிணையின்மலர்தொடுத்திருத்தாமத்தாரே
நேரணிந்தவன்பினர்கணிதமுமேத்த நிலைபெருநியவருளுமேமத்தாரே
சீரணிந்தவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (7)

நித்தியரேநின்மலரேயாடீரூஞ்சல் நேற்றியிலோர்விழியாரேயாடீரூஞ்சல்
சத்தியரேதற்பரரேயாடீரூஞ்சல் தாரகமாமெழுத்தாரேயாடீரூஞ்சல்
முத்தியரேமுன்னவரேயாடீரூஞ்சல் மோதகமார்சரத்தாரேயாடீரூஞ்சல்
சித்தியபூவாத்தியடிக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாடீரூஞ்சல். (8)

போதாந்தப்புண்ணியர்கள்போற்றவன்னோர்பூவுளத்திலுறைசோதிபோதமார்ந்த
வேதாந்தமெனவுரைசெய்விட்டிலாரும் விளங்குசுடரேமேற்றத்துவமதான
நாதாந்தங்கடந்தொளிருஞ்ஞானரூபநாயகரேயங்குசபாசத்தினரே
சிதாந்தவாத்தியடிக்கோயின்மேவுஞ் சித்திவிநாயகக்கடவுளாமருஞ்சல். (9)

பூமாதுவாழமுகில்பொழிந்துவாழப் புகல்வேதவாகமங்கள்பொலிந்துவாழ
நாமாதுவாழவானடியார்வாழநாற்குலருமத்தையருநயந்துவாழக்
கோமாதுவாழமெய்ச்செங்கோலும்வாழக் குணமேவுமறநெறிகுன்றுதுவாழச்
சீமாதுவாழாத்திக்கோயின்மேவுஞ்சித்திவிநாயகக்கடவுளாமருஞ்சல். (10)

## எச்சரிக்கை

இராகம்-சாவேரி. தாளம்-ஆதி.

சீர்பூத்திடுமாத்தியடித்திருக்கோயில்கொண்டருளுங்
கார்பூத்திடுகரிமுகத்துக்கருத்தாவெச்சரிக்கை
நீர்பூத்திடுநதியார்சடைநீறணிந்தோன்மகனே
ஏர்பூத்திடுமேகதந்தவிறைவாவெச்சரிக்கை.

திருமேவியவாத்தியடித்தேவகணபதியே
உருமேவியலம்போதரவொருவாவெச்சரிக்கை
குருமேவியகோட்டாற்குருகுலவேந்தர்கள்சரிதம்
பெருமேருவிற்பொறித்தேயருள்பிரானேயெச்சரிக்கை

பாசம்பெறுங்கரத்தாயன்பர்பாசந்தெறுங்கருத்தாய்
வாசம்பெறுதாமம்புனைவரதாவெச்சரிக்கை
நீசம்பெறநிலவிற்கொருநெடுஞ்சாபமிட்டவனே
தேசம்பெறுசெவ்வேணிகொண்டவேயெச்சரிக்கை

அணிசேரைந்துகரனேமுழுதகிலந்தொழுபானே
பணிசேர்திருவணிபூண்டிடுபகவாவெச்சரிக்கை
மணிசேர்திருப்புதுக்கோயிலின்வாசாவன்பர்நேசா
துணைசேரடிதொழுவார்க்கருள் தூயாவெச்சரிக்கை.

## பராக்கு

இராகம்-புன்னாகவராளி. தாளம்-சம்பை.

ஏரார்விநாயகனும்இறைவாபராக்கு
எழிலாருமாத்தியடியுறைவாய்பராக்கு
பேராருமானைமுகப்பெம்மான்பராக்கு
பேசரியவைந்துகரப்பிள்ளையாய்பராக்கு
அத்தமதின்மோதகங்கொளத்தாபராக்கு
அரியிலிடர்தீர்த்தருளுங்கர்த்தாபராக்கு
பத்தருளந்தன்னிலுறைபரனேபராக்கு
பார்ப்பதியாள்பெற்றெடுத்தபாலாபராக்கு
அங்குசந்தரித்தருள்கையரனேபராக்கு
ஆத்தியடிகோயில்கொளும்பரனேபராக்கு
சங்கரற்குமுன்மகனுந்தலைவாபராக்கு
சகத்தவர்கள்சேவைசெயுஞ்சாமிபராக்கு.

## மங்களம்

இராகம்-அசாவேரி. தாளம்-ஆதி.

ஆத்தியடிவிநாயகற்குமங்களந் திரு
ஆனைமுகவீசனுக்குமங்களம்
நேத்திரமூன்றுடையவற்குமங்களம் சுப

நித்தியானந்தநக்குமங்களம்
சீராரேரம்பனுக்குமங்களம் நல
சித்திதருகணபதிக்குமங்களம்
சூராரோர்கோட்டனுக்குமங்களம் அருள்
குன்றுதநாதனுக்குமங்களம்
நாதமுங்கடந்தவற்குமங்களம் திகழ்
ஞானவடிவானவற்குமங்களம்
பூதகணநாதனுக்குமங்களம்
பூவாத்தித்தேவனுக்குமங்களம்.

## லாலி

இராகம் - நவரோஸ். தாளம் - சம்பை

ஆத்தியடியீற்றிருக்கும்ஐங்கரத்துத்தூயா
பூத்தூளியடிபணியப்பூசையருணேயா லாலி
எங்குமெங்கும்யான்நினைக்கவெதிர்வருஞ்சர்வேசா
பொங்குவெள்ளநீர்வாய்க்காற்புளியடியின்வாசா லாலி
சந்திமுகத்தியவனைச்சாடுமொற்றைக்கொம்பா
நொந்தவடியார்வினையை நூறியருணம்பா லாலி
அந்தகன்பாலென்னைவிடாதருளுமலர்ப்பாதா
அந்தமுதலின்றிவளரானைமுகநாதா லாலி

## நலங்கு

இராகம் - நவரோஸ் தாளம் - ஆதி

போற்றினரைக்காப்பவனேபுங்கவர்சூளாமணியே
வீற்றிருக்குமாத்தியடிவிநாயகனும்பெம்மானே
தும்பிமுகவையாவேதுய்யசுடர்மெய்யாவே
எம்பிழைகள்தீர்த்தருள்கவேரம்பமூர்த்தி.

## ஏசல்

இராகம் - நவரோஸ் தாளம் - திசரம்

தையலரையுங்கள்மையல்வாய்க்காதிவி
 தந்திமுகன்தொண்டனடிநான்
பொம்மிலன்பரையாளும்புண்யவிநாயகக்குருக்கள்
 புன்மொழிக்காகாரடி.
ஆத்தியடிகோயிலுறையானைமுகனன்பர்
 அணையவிளிவாராரடி.
பார்த்துமருட்டாதேசரசம்புரியாதே
 பணிந்துமென்வாயாதடி.

## முறையீடு

இராகம்-சவுராட்டிரம். தாளம்-திசரம்.

ஐம்முகரேதீர்பயந்தஆத்தியடிப்பிள்ளையார்என்னை
ஆவலைத்தங்குமிங்குமாட்டுவதைக்கண்டிலிரோநீரே
எத்தனைபேரன்பர்களுக்கிகபரவாழ்வீந்துவிட்டான்
என்னைநீக்காதபடிதிருவடிக்குப்பூசைசெய்யியம்முறையீடே.

முற்றிற்று.

ஸ்ரீமத். மு. தம்பையாக்குருக்கள் அவர்களால்
இயற்றப்பட்டது.

உ

# வினை தீர்க்கும் நாயகன்

எங்கும் நிறைந்தவர் இறைவன். அணுவிற்குள் அணுவாக வியா பித்துள்ளார். எல்லாப் பொருளிலும் தங்கியுள்ளார். கருணை உள்ளம் கொண்டவர். உயிர்களைப் பிறவிப் பெருங்கடலில் இருந்து ஈடேற்றுகிறார். உயிர்கட்டு நித்திய வாழ்வு கொடுப்பதற்காக வெவ்வேறு மூர்த்திகளாக தோன்றி இரட்சிக்கின்றார். மூர்த்திகளின் மேற்பட்ட அருவம், உருவம் அருவுருவம் எனும் நிலை கொண்ட சிவத்தின் பெருநிலைக்கு விநாயகர் என்று பெயர்.

யானை முகம் கொண்டவர் விநாயகர். முகம் ஓம் என்னும் பிரணவத்தின் முதல் எழுத்தைக் குறிக்கிறது. பிரணம் என்றால் ப்ர-விசேஷம் நவம்– புதுமை. அனுபவிக்க அனுபவிக்கப் புதுப் புது விசேஷ உண்மைகளை உண்ர்த்துவது, என்றும் காலத்தால் தேயாது, வாடாது எப்போதும் புதுமையாகவே இருக்கும் என்றும் பொருள்படும். எனவே தான் பிறவிப் பெருங் கடலைத் தாண்ட உதவும் ஓம் என்னும் தாரக மந்திரத்தின் வடிவத்தைப் பெற்றுள்ளார்.

விநாயகரின் திருவுருவம் பல தத்துவ நுட்பங்களை விளக்குகிறது. முக்கண்ணும், மாலையும் சிவபிரானையும். அவரது நாபி பிரமனையும் இடப்பாகம் சக்தியையும், வலப்பாகம் சூரியனையும் குறிக்கிறது. விநாயகர் ஐந்து கரங்களை உடையவர். இதனால் ஐங்கரன் எனும் பெயர் பெறுகிறார். கரத்தில் காணப்படும் பாசம் படைத்தலையும், ஒற்றைக்கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் குறிக்கிறது. எனவே தான் அருள் வேண்டி நிற்பவர்கள் மோதகம் படைத்து வணங்குகிறார்கள். விநாயகரின் விலங்குருக் கொண்டதலை, மனிதஉடம்பு, தேவபாதங்கள் அவர் விலங்கு. மனிதன், தேவர் என்னும் எல்லா உயிர்கட்கும் தலைவன் என்பதை குறிக்கிறது.

விநாயகப் பெருமானுக்கு பதினாறு வகை மூர்த்தங்களுண்டு. சித்தி புத்தி வல்லபை என்னும் சக்திகளுண்டு. அவர் அடியார்கட்டு அருள்-பாலிப் பதற்காக முப்பத்துஇரண்டு திருவுருவங்களில் எழுந்தருளுகின்றார்.

விநாயகப் பெருமானை வழிபட்டால் கைமேல் பலன் கிடைக்கும் என்பது முதுமொழி. எந்தக் காரியத்தைத் தொடங்கும் முன்பும் விநாய கர் வணக்கத்துடன் அல்லது பிள்ளையார் சுழி உ இட்டு ஆரம்பித்தல் தொன்று தொட்டு உண்டாகிய வழக்கம். பிள்ளையார் சுழியே கடவுள் வணக்க முதல் எழுத்தாகும். இவ் எழுத்தில் விந்து நாதங்களே வட்ட மாகவும் நீள்கோடாகவும் காணப்படுகிறது. விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பிக்கும் காரியங்கள் யாவும் ஒரு இடையூறுமின்றி நிறைவேறுவதால் விநாயகர் விக்கினேஸ்வரர் எனப்படுகிறார். விககினேஸ்வரர் – இடையூறு அகற்றுபவர். எனப் பொருள்.

விநாயகர் ஞான அறிவானவர். உலகுக்கு ஞானத்தில் விருப்பத்தை ஏற்படுத்த விரும்பியே விநாயகரும் வேலவரும் ஒரு மாங்கனியை விரும்பினுர்கள். கனி ஞானத்தைக் குறிக்கிறது. ஞானத்தைச் சிதைக்க முடியாது. இதனுல் தான் அக்கனியை இறைவனுர் பாதியாக்கவில்லை. ஞானத்திற்கு ஈடாக வேறென்றில்லை. எனவே தான் இறைவனுர் புதிய கனியைப் படைத்துத் தரவில்லை. அத்தகைய ஞானக்கனியை அம்மை அப்பரை வலம் வந்து விநாயகர் பெற்ருர். விநாயகர் வழிபாட்டின் மூலம் கல்வி, அறிவு ஞானம் என்பன கிடைக்கும். இதனுல் விநாயகர் ஞான விநாயகர் எனப்படுகிருர்.

விநாயகர் வழிபாட்டின்போது தலையில் இருகைகளாலும் குட்டிக் கும்பிடுவதும், காதுகளை இரு கைகளாலும் மாறிப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடுவதும் வழமை. இதற்குப் புராணக்கதைகளுண்டு. ஒரு சமயம் விநாயகர் இந்திரனுக்கு அருள் செய்ய விரும்பினுர். அப்போது அகத்திய முனிவர் காவேரியை கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்தார். எனவே விநாயகர் காகமாக மாறி முனிவரது கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டார். கமண்டலத்தில் அடைத்து வைக்கப்பட்ட காவேரி பாய்ந்தது. அதனுல் முனிவர் சினங்கொண்டு காகத்தைத் துரத்தினுர். காகம் சிறுவனுக மாறியது. அச் சிறுவனை முனிவர் குட்டச்சென்ருர். சிறுவன் பிள்ளையாராக மாறி முனிவர்முன் காட்சி கொடுத்தார். பிள்ளையாரைக் குட்டச்சென்ற அதே கைகளால் முனிவர் தமது தலையில் குட்டிக் கும்பிட்டார். அன்று முதல் விநாயகரைக் குட்டிக்கும்பிடுவது வழக்கமாயிற்று என்பது ஒரு கதை.

இன்னென்று, தட்சயக்ஞத்தை அழிக்கச் சென்ற வீரபத்திரர் மீது திருமால் சக்ராயுதத்தை ஏவினுர். அதனை வீரபத்திரர் அணிந்திருந்த மாலையிலிருந்த வெண்டலை (கபாலம்) ஒன்று கவ்விக்கொண்டது. ஆயுதத்தைத் திரும்பப் பெறும் பொருட்டு திருமாலின் சேனைத் தலைவர் விகடக்கூத்தாடினுர். அது கண்டு அனைவரும் சிரித்தார்கள். மாலையிலிருந்த வெண்டலையும் சிரித்தது. அப்போது அதன் வாயிலிருந்த சக்ராயுதம் வெளியே விழுந்தது. அதனைச் சேனைத் தலைவர் எடுப்பதற்கு முன் விநாயகர் எடுத்து மறைத்துக் கொண்டார். சேனைத் தலைவர் மீண்டும் விகடக்கூத்தாடி விநாயகரை மகிழ்வித்து, அவரிடம் இருந்து சக்ராயுதத்தை பெற்று திருமாலிடம் தந்தார். விநாயகரை மகிழ்விக்க சேனைத்தலைவர் ஆடிய விகடக்கூத்து காலப்போக்கில் தோப்புக்கரணமாகியது. விநாயகரை வணங்க தோப்புக்கரணம் இடுதல் வழக்கமாகிவிட்டது.


விநாயகர் வழிபாட்டை எவரும் எளிதாகச் செய்யலாம். மண்ணையோ, சாணத்தையோ, மஞ்சளையோ பிடித்து பிள்ளையாராக்கி அறுகம்புல்லையோ, பச்சிலையையோ சாத்தி வழிபடலாம். வழிபாட்டுக்குச் சிவப்புமலர்கள், சிவப்புப்பட்டு என்பன சிறந்தவை. மற்றும் இளநீர், பால், தேன், பருப்பு,

கரும்பு, சர்க்கரை, வாழைப்பழம், பலாப்பழம், கடலை, அவல், எள்ளுருண்டை, மோதகம் என்பன விநாயகருக்கு நிவேதிக்கப்படக்கூடியவை. துளசி, நொச்சி, அறுகு, கரந்தை, மாதுளை, கொன்றை போன்றவை அர்ச்சனைக்குரியன. விநாயகருக்குரிய விரதங்களாக வெள்ளிக்கிழமை விரதம், சதுர்த்தி விரதம், பிள்ளையார் நோன்பு, சங்கடஹர சதுர்த்தி என்பன அநுஷ்டிக்கப்படுகின்றன.

விநாயகரைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் வாக்குண்டாகும். நல்ல மனமுண்டாகும். மேனி நுடங்காது. வெவ்வினை அகலும், அல்லல் தீரும்.

''அல்லல் போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிக மா மருனைக் கோபுரத்துள் வீற்றிருக்குங்
கணபதியைக் கை தொழுதக் கால்''

இ. கிருஷ்ணதாஸ்



● அழியா அவித்தை அழிந்தொழிய ஞான
விழியா லெரிக்கும் விமலன் — மொழியதனை
நெஞ்சே நினைந்துருக நீங்காக் குருபரன்றன்
கஞ்சமலர்த் தாளே கதி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விநாயக வழிபாடு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன். - திருமூலர்

**தோற்றுவாய்:-**

விநாயகர் (வி+நாயர்) என்றால் தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாதவர் என்று பொருள். இவர் திருமேனி ஞானமயமானது இவர் பக்தி அன்புடன் வழிபடும் அடியவர்களுக்கு நாளும் அருளை வாரி வழங்கும் வள்ளல். எங்கும் நிறைபவர். எப்பொருளிலும் கலந்து நிற்பவர்.

**தோற்றம்:-**

விநாயகர் தோற்றத்தை விரித்து விளக்கும் புண்ணியங்கள் பல வரலாறுகள் அளப்பில. முக்கியமான இரு வகைகளை மட்டும் பார்ப்போம்.

1. பரமேஸ்வரனும் பார்வதி தேவியாரும் ஒரு சமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதியிருந்த மண்டபத்தைச் சேர்ந்தனர். அங்கே எழுதப் பெற்றிருந்த பிரணவத்தைக் கண்ணுற்றனர். சமப்படி பிரணவம் பிரிந்து ஆண்டவன் எழுத்தாகிய அகரம் ஆண் யானையாகவும் அம்மை எழுத்தாகிய உகரம் பெண் யானையாகவும் மாறின. இரண்டும் சேர்ந்தன போல் காட்சியளித்தன. யானை முகத்துடன் கூடிய விநாயகர் தோன்றினர், காஞ்சிப்புராணம்

2. திருக்கயிலை நந்தவனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. அதை உமாதேவியார் உற்று நோக்கினர். பிரணவம் களிறும் பிடியுமாக மாறிப்புணர்ந்தன. (ஆண் யானையும் பெண் யானையும் கூடின என்பதும், சிவம் சக்தியுடன் கூடியது என்பதும், அகர உகரங்களாகிய சிவமும் சக்தியும் கூடிச் சுத்த மாயா காரியமாகிய நாதப் பிரணவம் ஆயிற்று என்ற தத்துவத்தை விளக்க வந்த உண்மையே தவிர வேறில்லை.)

**விநாயகர் திரு அவதாரஞ் செய்தல்:-**

இதனைக் கந்தபுராணம், தட்சகாண்டம், கயமுகன் உற்பத்திப் படலத்தில் காணலாம்.

''அக்கணத் தாயிடை ஐங்கரத் தவனருள்
முக்கணன் வாயினன் மும்மதத்தானுமாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத்தவன் மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன் வந்தருளினன்''

இவ்வரலாற்றை யொட்டியே திருஞானசம்பந்த சுவாமிகளும் தாம் பாடிய தேவாரப் பாடலொன்றில் கூறியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொள மிகு கரியது
வடி கொடு தன தடி வழிபடும் அவரிடம்
கடி கண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

**தத்துவம்:-**

விநாயகருக்கு யானை முகமும், மூன்று கண்களும் இரண்டு செவிகளும், ஐந்து கரங்களும், பானை வயிறும் குறுகிய திருவடிகளும் உண்டு. யானைமுகப் பெருமான் பிரணவ வடிவினர் என்பதை விளக்கும். ஐந்து கரங்கள் தானே ஐந்து தொழில்களையும் செய்பவன் என்பதனையும் மூன்று கண்கள் சோம சூரிய அக்கினிகளையும், விசாலமான இரு காதுகள் ஆன்மாக்களை மலபந்த வாதனை தாக்காமல் காத்து வினை வெப்பத்தைபோக்கும் என்னும் உண்மையையும் நிலை நிறுத்தும். பெரிய வயிறு எல்லா அண்டங்களும் உயிர்களும் தன்னுள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தைக் குறிக்கும்.

மிகப் பழைமையான ருக்வேதத்தில் ''நற்குணநந்தி ப்ரசோதயாத்'' என்ற கணபதி காயத்திரி வருவதால் விநாயக வழிபாடு மிகப் பழமையானதே.

இத்தகைய விநாயகப் பெருமானை வழிபட்டுப் பல நற்பேறுகளைப் பெற்றுய்ந்த மன்னர், முனிவர், ரிஷகள் முதலியோர் வரலாறுகளை ஸ்ரீ கவின் கூடிக் கச்சியப்ப முனிவர் அவர்கள் இயற்றியுள்ள பார்க்கவ புராணத்திற் காணலாம்.

புதிய ஆலயங்களை எழுப்புவதைவிடப் பழுதுபட்ட ஆலயங்களைச் சீர் செய்வது தான் சிறந்தது என்று ஆகமங்கள் பேசுகின்றன. இதையுணர்ந்து செயல்படும் ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தர்மபரிபாலன சபையினர் அனைவருக்கும், அவர்களுடன், உடன் நின்று செயலாற்றிய மற்றும் அனைவருக்கும், நிதி உதவி, பொருள் உதவி, சிரம உதவி அளித்து ஆவன செய்த அனைவருக்கும், சுற்றம் சூழலில் உள்ள கிராம மக்கள் அனைவருக்கும், ஆத்தியடி விநாயகப் பெருமான் திருவருள் பாலிக்கும் வண்ணம், அப்பெருமானை வேண்டுகின்றேன்.

வாழ்க சிவப்பணிகள்

**ச. சிவசுப்பிரமணியம்**
சிவதொண்டன்

ஆத்தியடி.

---

● மாதா வெளியின் மனமொன்ற வைத்தபின்
போதக மாகும் உடம்பு — ஔவையார்

உ

# விநாயகர் ஆலயமும் கும்பாபிஷேகமும்

திருநெறி என்றும் பெருநெறி என்றும் சிவநெறி என்றும் போற்றப்பெறும் சைவ நெறிக்குத் திருக்கோவில் ஆணிவேர் போன்றது. எல்லாவற்றிற்கும் மேலான இறைவன் ஆன்மாக்கள் பொருட்டுத் திருக்கோவில்களில் எழுந்தருளியிருந்து அருள்செய்கின்றார். நாம் மனதை ஒருமைப்படுத்தி, இறைவழிபாடு நிகழ்த்துவதற்குரிய சிறந்த இடமாகத் திருக்கோவில் அமைந்துள்ளது.

முற்காலத்தில் ஆற்றங் கரைகளிலும் மரச்சோலைகளிலும் மரத்தின் அடியிலும் தெய்வ உருவங்களை அமைத்து, அதனையே மக்கள் வழிபட்டனர். பின்னர் சிறு கட்டடங்களை அமைத்து, அங்கு தெய்வங்களின் உருவச்சிலைகளை வைத்து வழிபட்டனர். காலஞ் செல்லச்செல்ல தற்போதமைந்திருக்கும், ஆகம முறைப்படி எழுந்த கோவில்களைக்கட்டி வழிபட ஆரம்பித்தனர். இக்கோவில்கள் மனித உடலமைப்பிலேயே அமைந்திருப்பதனை நாம் அவதானிக்கலாம். ஆலயத்தின் ஒவ்வொரு உறுப்புக்களும் ஒவ்வோர் உண்மையினை உணர்த்துகின்றது. ஆகவே 'கோவில்' என்பது 'உடல்' என்னும் கோவிலின் புறச்சின்னமாகும். புறச்சின்னத்தை உடலிலுள்ள தத்துவங்களிற்கு ஒத்திருக்கும்படியே கட்டவேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. சுற்றிலும் மதிலெடுத்து, ஒருபுறம் பெரிய வாயிலமைத்து, அங்கு ஒரு பெரிய கோபுரம் அமைக்கின்றனர். அக்கோபுரத்தையே 'தூலலிங்கம்' என்பர். தொலைவிலிருந்தே மக்கள் காணும்பொழுதெல்லாம் மக்களுக்குத் தெய்வநினைவு உண்டாகும் வகையில் இதனை அமைத்துள்ளனர். கோபுரத்தில், உலகிலுள்ள தாழ்ந்தநிலிருந்து உயர்ந்தது வரையுள்ள எல்லாப் பொருட்களின் உருவங்களையும் காணலாம். அக்காட்சி இப்பேரண்டத்தின் நினைவையே நமக்கு உண்டுபண்ணுகிறது. இக்கோபுரத்தின் வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்றாக, ஒற்றை எண்ணிக்கையாகவே அமைந்திருக்கும். எத்தனை வாயில்கள் இருந்தாலும் தரை மட்டத்திலுள்ள வாயில் வழியாகவே நாம் உட்செல்லமுடியும். இவ்வாறே நாம் கடவுளைநாடிச் செல்லும்பொழுதும் நம் மனம் ஒன்றே பயன்படுகிறது என்பர்.

ஈழத்திலே பிரசித்திபெற்ற பல ஆலயங்களில் பல அடிகள் உயரமான கோபுரங்களை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அனைத்து ஆலயங்களிலும் கோபுரங்களை நாம் காணமுடிவதில்லை. மேலைப்புலோலியில் அமைந்திருக்கும் நமது ஆத்தியடி விநாயகர் ஆலயமும் தற்பொழுதுதான் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது எனலாம். இவ் ஆலயத்தில் ஓர் அழகான கோபுரம் இல்லையென்பது மக்களின் அடங்காத மனக்கவலை. எனினும் இவ் ஆலயத்தின் எந்தத் திக்கில் நின்று நோக்கினும், மூலஸ்தான தூபியின் முழுஅழகும் அனைவர் கண்களை மட்டுமன்றி, நெஞ்சத்தையும் கவர்கிறது என்றால் மிகையாகாது. ஓரளவு நிவர்த்திசெய்யும் வகையில் அழகுப் பொலிவுடன் உயர்ந்து விளங்குவதே இதற்குக் காரணமாகும். ஆயினும் சிறிது சிறிதாகத் திருப்பணிகள் செய்யப்பட்டுவரும் ஆத்தியடி விநாயகர் ஆலயம் விரைவில் ஓர் அழகான கோபுரத்துடன் அருமையான காட்சியைக் கொடுக்கும் என்பது எம்மவர்களின் அசையாத நம்பிக்கை. கோபுரம் தவிர்ந்த ஆலயத்தின் உறுப்புகளான கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நப மண்டபம், ஸ்தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் முதலிய விசேட மண்டபங்களும் திருச்சுற்று யாகசாலை, நந்திபீடம், பலிபீடம், கொடிமரம் என்பனவும் முறைப்படி இங்கு அமையப்பெற்றுள்ளன.

விநாயகர் ஆலயங்களிற்கே ஒரு தனிச் சிறப்பு உண்டு. ''விநாயகனே வினை தீர்ப்பவன்; கணபதி பூசை கைம்மேற் பலன்'' என்னும் பழமொழிகள் பற்றிய கருத்துக்களை நாமுணர்வோம். விநாயகரை வழிபட்டுத்தான் எல்லாக் காரியங்களையும் பூசைகளையும் விழாக்களையும் தொடங்குவது நம் வழக்கமாகும். நூல்கள் இயற்றப்படும்

பொழுதும் விநாயக வணக்கத்துடனேயே ஆரம்பிக்கப்படும். எதையாவது எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழியிட்டுக் கொள்வது வழக்கம். இவ்வெழுத்து ஒரு சுழியையும் கோட்டையும் கொண்டது. இவை ஓங்கார வடிவமாய் இறைவனையும் அவனை வணங்கும் குறியையும் காட்டுவன. விநாயக வழிபாட்டிலேயே சிறந்த பகுதி, பக்தன் தன் தலையில் இரு கைகளாலும் குட்டிக் கும்பிடுதலும் தன் காதுகளைப் பிடித்துத் தோப்புக்கரணம் போடுவதுமாகும். செவிகளுக்கும் மூளைக்கும் இருபது நரம்புகளின் தொடர்பு உண்டென்பர். செவி வழியாகப் பெற்ற உபதேசம் மூளையில் தங்குவதற்காக இந்த நரம்புகளைப் பயன்படுத்தவே குட்டுதலும் தோப்புக்கரணமும் செய்யப்படுகிறது என்பர். தோர்பிகரணம் என்பதே நாளடைவில் 'தோப்புக்கரணம்' என வழங்கி வரலாயிற்று. இந்த வழிபாட்டு முறைகள் விநாயகருக்கு மட்டுமே உரித்தானவை.

இறைவன் திருக்கோயில்களிலுள்ள திருமேனிகளில் எழுந்தருளுகின்றார். அவர் திருமேனிகளில் எழுந்தருளுவது மந்திர சாந்நித்தியத்தினாலேயாம். திருமேனிகளில் சாந்நித்தியம் உண்டாகச் செய்வது கும்பாபிஷேகம் எனப்படும். அபிஷேகங்கள் பலவகைப்படும். அவற்றுள் சிறந்தது கும்பாபிஷேகம். கும்பாபிஷேகமும் பலவகைப்படும். இவற்றுள் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறந்தது. இதனைப் பெருஞ்சாந்தி என்றும் வழங்குவர். ''பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அதன் அருமைபெருமைகளைக் குறித்து அருளியுள்ளார். ஒருவர் தம் வாழ்நாளில் ஒரு கும்பாபிஷேகத்தையாவது கண்ணாரக் காணுதல்வேண்டும் என்பர்.

ஆனால் முன்னொரு காலத்திலே ஒரு பக்த அடியார் கும்பாபிஷேகத்தை மனத்திலேயே நிகழ்த்தி, மனதால் கண்டுமகிழ்ந்து இறைவன் அருளைப் பெற்றிருக்கிறார். இவ்வடியார் வேறுயாருமல்லர் பூசலார் நாயனாரே. திருநின்றவூரில் வாழ்ந்துவந்த சிவபக்தரான இந்நாயனார் சிவனுக்கு ஒரு கோவில்கட்ட விரும்பினார். ஆனால் வறுமையில் சிக்கித் தவித்து, வலிமை இழந்த இவரால் ஒரு கோவிலைக்கட்டி வழிபடக்கூடிய வசதி இருக்கவில்லை. இதனால் அவர் மிகவும் மனவருத்தம் அடைந்தாரே தவிர மனம் தளரவில்லை. ''நான் என்னுடைய இறைவனுக்கு என் மனத்திலேயே ஒரு ஆலயத்தைக் கட்டிவிடுவேன்'' என்ற ஆழமான நம்பிக்கையுடன் கட்டடவேலைகளை ஆரம்பித்தார். அவருடைய மனதினிலே கோவிலின் பலமான அத்திவாரம் அமைக்கப்பட்டது. கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், கல்யாண மண்டபம், யாகமண்டபம் என்று ஒவ்வொரு மண்டபங்களும் எழுந்தன. தொடர்ந்து தூபி, ராஜகோபுரம், திருக்குளம், திருத்தேர் அனைத்தும் அழகுடன் உருவாகின. மன ஆலயத்தின் கட்டடவேலைகள் நிறைவுபெற்றதும், மறுநாள் கும்பாபிஷேகம் நிகழ்த்த அவாப்பட்டார். ஆனால் பூசலாரின் மனக்கோவில் கும்பாபிஷேகத்திற்கு இறைவன் எழுந்தருள வேண்டுமே!? இதனை மனதிற்கொண்டு ''இறைவா! என் மனக்கோவிலில் நாளை கும்பாபிஷேகம்; தாங்கள் எழுந்தருள வேண்டும்'' என்று இறைவனிடம் இறைஞ்சினார். இதேவேளையில் காஞ்சிபுரத்திலே காடவர்கோன் என்ற அரசன் ஏராளமான பொருட்களைச் செலவுசெய்து ஒரு கோவிலைக் கட்டிக்கொண்டிருந்தான். ஏராளமான சிற்பிகள், தச்சர்கள், கொத்தர்கள் அங்கே இராப்பகலாக வேலைசெய்தனர். கோவில் வேலை பூர்த்தியடைந்ததும் மன்னர் காடவர்கோன் கும்பாபிஷேகத்திற்கு நாள் குறித்தான். அன்றிரவு சிவபெருமான், மன்னனின் கனவிலே தோன்றி, ''அன்பனே! நீ குறித்த நாளை மாற்றிக்கொள்; திருநின்றவூரிலே பூசலார் கட்டிய கோவிலில் நாளை கும்பாபிஷேகம் நிகழ இருக்கிறது; நான் அங்கு போகவேண்டும்'' என்று கூறிமறைந்தார். இதனையறிந்த மன்னன் திடுக்குற்று விழித்தெழுந்தான். உடனேயே தனது பரிவாரங்களுடன் திருநின்றவூரிலிருக்கும் பூசலாரின் கோவிலைத்தேடிப் புறப்பட்டான். ஆனால் அங்கு பூசலார் கட்டிய கோவில் எதுவும் கண்ணில் அகப்படாமல் போகவே, பூசலாரிடம் சென்றான். தான் கனவிலே அறிந்த செய்தியை எடுத்துரைத்து, ''தாங்கள் கட்

கட்டிய கோவில் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான் அதைக்கேட்ட பூசலார் உடல் புல்லரிக்க, தான் கட்டிய கோவில் தன் மனதில்தான் இருக்கிறது என்ற உண்மையை எடுத்துக் கூறினார். மறுநாள் பூசலாரின் மனக்கோவிலிலே கும்பாபிஷேகம் நிகழ, இறைவன் எழுந்தருளி, எல்லோருமே வியக்கும்வண்ணம் அருள்பாலித்தார். இவ்வாறு ''கடவுளே கதி'', என்ற முழுநம்பிக்கையுடனும், நிறைந்த கடவுள் பக்தியுடனும் வாழும் அடியவர்களுக்கு ஆண்டவனின் கிருபை நிச்சயம் கிடைக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

அபிஷேகங்களிலேயே மகிமைவாய்ந்த இக் கும்பாபிஷேகம் ஒரு புனித அபிஷேகமாகும். இறைவன் ஆன்மாக்களை உய்ய வைத்து ஆட்கொண்டருளுவதற்காக எழுந்தருளும் உருவத்திருமேனிகள் பல. அத்திருவுருவங்களையே சித்ரங்களாகவும் சிலைகளாகவும் அழகுற வடித்து ஆலயங்களில் பூசிப்பர். சிலைகளைக் கருங்கல்லாலும் ஐம்பொன்னாகிய உலோக வகைகளாலும் வடித்தல் வேண்டும் என்பது விதி. ஏனெனில் பாரிடை ஐந்தாய்ப் பரந்துள்ளவன் இறைவன் என்பர். நிலத்திலுள்ள கல்லில் அதிக சக்தியுண்டு. ஐம்பூதங்களின் இயல்புகளும் அதிலுண்டு. பூதங்கள்தோறும் பொலிந்துவிளங்கிப் போக்குவரத்தின்றியுள்ள இறைவனைக் கல்லில் வடிக்கக் கண்டனர். செம்புபோன்ற உலோகங்கள் மின்சக்தி வாய்ந்தவை. சக்தியைத் தன்பால் இழுத்து மீண்டும் கொடுப்பதில் செம்பு சிறந்ததெனக்கண்டு, நம்மவர் உற்சவமூர்த்திகளைச் செம்பினால் செய்யக் கண்டனர்.

இறைவன் ஓரியல்புள்ள ஆகாயமாகி, ஈரியல்புள்ள வாயுவாகி; மூவியல்புள்ள அக்னியாகி; நான்கியல்புள்ள நீராகி; ஐந்தியல்புள்ள மண்ணாகி என்றும் பிருதிவித் தன்மையில் விளங்குபவன். முதலில் அருவமாகி, பின் அருவுருவமாகி, இறுதியில் உருவமாக உள்ள பெருந்தத்துவத்தை இக்கும்பாபிஷேகத்தால் அறியலாம். எங்கும் பரந்திருக்கும் இறைவனை, விக்கிரகத்தில் சாந்நித்தியம் பெறச்செய்து, வழிபாட்டினால் அவரை அதனின்றும் வெளிப்படுத்தி, எமக்கு அருள்செய்ய வழிவகுப்பது கும்பாபிஷேகம். அது மந்திரம், கிரியை, பாவனை முதலியவற்றால் சிறப்புறச் செய்யப்பெறுவது.

பழைய திருக்கோயில்களில் மந்திரசாந்நித்தியம் நீங்காதிருத்தற் பொருட்டும், புதிய ஆலயங்களில் அதனை உண்டாக்குதற் பொருட்டும் பெருஞ்சாந்தி என்னும் கும்பாபிஷேகத்தைப் பெருந்தொகை செலவிட்டுச் செய்துவருகிறார்கள். பெருஞ்சாந்தி செய்தபின்பே திருக்கோவில்களில் நித்திய பூசைகள், நைமித்திய பூசைகள், விழாக்கள் செய்தற்குரியன என்று ஆகமங்கள் கூறுகின்றன. இங்ஙனமே நித்தியபூசைகளிலுண்டாகும் குறைகுற்றங்களைப் போக்கப் பெருஞ்சாந்தியும் செய்யப்படுகிறது எனக்கருதுவர்.

''மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் நல்விழாப் பொலிவு கண்டார்தல்'' என்று ஞானசம்பந்தர் சுவாமிகள் அருளியுள்ளார். இத்தகைய பெறற்கரும் பெரும்பேறு எமக்குக் கிடைக்க ஆத்தியடி விநாயகனின் அருள் கிடைத்ததில் அனைவரும் அவருக்குச் சிரந்தாழ்த்தி நன்றி கூறுவோம்.

செல்வி சந்திரா தியாகராஜா,
ஆத்தியடி,
பருத்தித்துறை.

உ

# இளைஞர் கல்வி தேர்ச்சிச் சங்கமும் கோவிலும்

காலைப் பிடித்தேன் கணபதி! நின்பதங் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப் பொழு(தும்)
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டில் நிறுத்தல் குறியெனக்கே.

பழம்பெருமை பேசுவது நன்றல்ல என்று படித்தவர்கள் கூறுவார்கள். ஆனால், வரலாறு என்று வரும்போது பழையதைக் கூறித்தான் ஆகவேண்டும். இளைஞர் கல்வி தேர்ச்சி சங்கத்தின் ஆதியை அறிந்தவர் எங்களிற் சிலரே. ஆனால், சங்கத்தின் அந்தத்தை யாருமே அறியாதிருக்க வேண்டுமென எம்பெருமானை வேண்டுவோமாக. தற்போது நீறுபூத்த நெருப்பாக உள்ள நம் சங்கம் 1910-ம் ஆண்டு இளஞ்சிறுவர் இலக்கிய சங்கம் (Y. B. L. A.) என்ற பெயருடன் திரு. க. வேலுப்பிள்ளை (சட்டம்பியார்) இல்லத்தில் திரு. நா. வேலுப்பிள்ளை அவர்கள் தலைவராகவும், திரு. சி. கனகசபை அவர்கள் செயலாளராகவும், திரு. வே. இராமசாமி அவர்கள் போஷகராகவும் நியமிக்கப்பட்டு அவர்கள்மூலம் சங்கமானது வழிநடத்தப்பட்டுவந்தது. பின்னர் இச்சங்கமானது, 1913-ம் ஆண்டளவிலிருந்து வாலிபர் இலக்கிய சங்கம் (Y.M.L.A.) எனப் பெயர்பெற்று இயங்கிவரலாயிற்று. 1941-ம் ஆண்டு கட்டப்பட்ட சங்கக் கட்டிடத்தை நினைவுகூருவோமாயின், எமக்கு திரு. நா. வேலுப்பிள்ளையும், திரு. சி. கனகசபையும் உடன் நினைவுக்கு வருவார்கள்.

எமது சங்கத்தின் முக்கிய குறிக்கோள்கள் மூன்றுகும். அவையாவன: கல்வி அபிவிருத்தி, உடல்நல அபிவிருத்தி, சமூகசேவை ஆகியனவாகும். கல்வி அபிவிருத்தியில் சமயக்கல்வி முக்கிய இடம்பெறுகிறது. அத்துடன் நூல்நிலையம் நடத்துதல், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழை வளர்த்தல் என்பனவும் ஆகும்.

எமது சங்கம் அமைக்கப்பட்ட காலத்தொட்டு விநாயகப் பெருமானின் அருளால் ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலில் விசேட நிகழ்ச்சிகளில் சங்கம் பங்குகொண்டு தொண்டாற்றிவருகிறது. அவையாவன: கொடியேற்றத் திருவிழாவில் 8-ம் நாளான சப்பறத் திருவிழா, நவராத்திரியின் இறுதியில்வரும் விஜயதசமி, மார்கழி திருவெம்பாவையில் ஊர்மக்களைத் துயிலெழுப்பல் என்பனவாகும். இவற்றைத் தவிரச் சில சரியைத் தொண்டுகளும் செய்துவருகின்றனர்.

சமயக்கல்வி பற்றி ஒன்றைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். 25-12-25இல் சுவாமி விபுலானந்த அடிகளார் எங்கள் சங்கத்திற்கு வந்து தங்கி கதாப்பிரசங்கம் நடத்தி விநாயகர் அருள்பெற்று உய்ய வழிகாட்டினர். பொதுவாக எமது சங்கம் பெருமைபடக்கூடிய விடயங்கள் பல உண்டு. அதில் ஒன்றை உங்களுக்குக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

25-12-40இல் இளைஞர்கள் சிறந்த ''கதம்ப நிகழ்ச்சி'' ஒன்றை நடத்தினார்கள். அதில் பலர் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட ''உடையார் மிடுக்கு'' எனும் நாடகம் இடம்பெற்றது. பின்பு அந்நாடகம் அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்கி யுத்த நிதிக்காக புத்தளத்திலும் விநாயகர் அருளால் இனிதே மேடையேற்றப்பட்டது.

தற்போதும்கூட எம்பெருமானின் அருளால் இளைஞர்கள் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களாலியன்ற சரியைத்தொண்டுகள் செய்து விக்கினேஸ்வரனின் அருளைப்பெற முயற்சிக்கின்றனர். அத்துடன் எம்பெருமானுக்கு ஒரு பூங்காவனம் அமைக்கும் ஆரம்ப முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அம்முயற்சி வெற்றி பெற நாம் எல்லோரும் விநாயகப் பெருமானிடம் பிரார்த்தனை செய்வோமாக.

பாவ ஆன்மாக்களான நாம் எல்லோரும் தொடர்ந்து விக்கினேஸ்வரப் பெருமானுக்குச் சரியைத் தொண்டுசெய்து மோட்சத்தைப்பெறவும், எம் சங்கமானது முன்பு இருந்ததைவிட முன்னேறிப் பேரும் புகழும் பெறவேண்டுமென இருகரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி அவனைத் துதிப்போமாக.

மக்கள் பணியே மகேஸ்வரன்
மலரடித் தொண்டென மனங்கொண்டு
எக்கணமும் நற்சேவை செய
ஏற்ற அருளைப் பெறுவமே.

க. இராம்குமார்
இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கமும்
கோவிலும்

# ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த நிகழ்ச்சி நிரலும் - உபயகாரர்களும்

| நாயன்மார் குருபூசை | மாதமும் திதியும் | உபயகாரர் |
|---|---|---|
| திருநாவுக்கரசர் | சித்திரை – திங்கள் | திரு. வே. ஜெயதேவன் |
| திருஞானசம்பந்தர் | வைகாசி – ,, | திரு. ச. சண்முகநாதன் |
| மாணிக்கவாசகர் | ஆனி – ,, | திரு. சே. வேல்முருகு |
| சுந்தரர் | ஆடி – ,, | திரு. சு. சிதம்பரப்பிள்ளை |

## மகா உற்சவம்

| | | |
|---|---|---|
| பந்தல் கால் நாட்டல் | வைகாசி – திங்கள் | திரு. சோ. ச. சோமசுந்தரம் |
| கிராமசாந்தி | | |
| கொடியேற்ற உற்சவம் | ஷஷ்டி | திருமதி செல்லம்மா குடும்பம் |
| இரண்டாம் ,, | | திரு. க. ஜெயக்குமார் |
| மூன்றும் ,, | | திருமதி இ. சிவபாதசுந்தரம் |
| நான்காம் ,, | | திரு. ச. சிவராமலிங்கம் |
| ஐந்தாம் ,, | | திரு. ச. சோமசுந்தரம் |
| ஆறும் ,, | | திரு. சி. சதாசிவம் |
| ஏழாம் ,, | | இளைஞர் கல்வி தேர்ச்சி சங்கம் |
| சப்பறத் திருவிழா | | திரு. சி. நடராஜா |
| தேர்த்திருவிழா | | திரு. கா. இராமச்சந்திரன் |
| தீர்த்தோற்சவம் | பௌர்ணமி | |

## நவராத்திரி விழா

| | | |
|---|---|---|
| ஆரம்ப பூசை | பிரதமை | திரு. கா. தியாகராஜா |
| இரண்டாவது | துவிதீயை | திரு. வ. கனகரத்தினம் |
| மூன்றாவது | திரிதீயை | திரு. வே. ஸ்ரீஸ்கந்தவேல் |
| நான்காவது | சதுர்த்தி | திரு. வே. ஜெய இந்திரன் |
| ஐந்தாவது | பஞ்சமி | திரு. சு. நடனசபாபதி |
| ஆறாவது | ஷஷ்டி | திரு. இ. சந்திரசேகரம் |
| ஏழாவது | மித்ரஸப்தமி | திரு. ச. சிவராமலிங்கம் |
| எட்டாவது | மஹாஷ்டமி | திரு. க. சண்முகநாதன் |
| சரஸ்வதி பூசை | மஹாநவமி | திருமதி இ. சிவபாதசுந்தரம் |
| விஜயதசமி | விஜயதசமி | இ. க தே. சங்கம் |

## ஸ்கந்த ஷஷ்டி விரத பூஜை - கார்த்திகைத் திங்கள்

| | | |
|---|---|---|
| ஸ்கந்த ஷஷ்டி ஆரம்பம் | பிரதமை | திரு. மு. கு. ஆறுமுகம் |
| இரண்டாம் பூஜை | | திரு. சி. மு. கந்தசாமி ( திரு. க. நடராசா |
| மூன்றும் பூஜை | | திரு. ச. மகேந்திரன் |
| நான்காம் பூஜை | | திரு. ச. முருகேசு |
| ஐந்தாம் பூஜை | | திரு. ச. குழந்தைவேல் |
| சூரன் போர் – | ஸ்கந்த ஷஷ்டி விரதம் | திரு. கு. ஆ. குமாரசாமி |
| பாறணை பூஜை | | திரு. ச. சபாபதிப்பிள்ளை |
| மணவாளக்கோல விழா | | திரு. வே. கந்தையா |

## பிள்ளையார் கதையும் விசேட பூசையும் - கார்த்திகை அமரபக்க பிரதமை

| | | |
|---|---|---|
| பிள்ளையார் கதை – | விநாயக விரதாரம்பம் | திரு. க. பாலச்சந்திரன் |
| | இரண்டாம் நாள் | திரு. ச. செல்லத்துரை |
| | மூன்றும் நாள் | திருமதி ஈ. சிவஞானசுந்தரம் |
| | நான்காம் நாள் | திரு. சி. வ. இராசமாணிக்கம் |
| | ஐந்தாம் நாள் | திரு. சி. தியாகராசா |
| | ஆறும் நாள் | திரு. ச. மகேந்திரன் |
| | ஏழாம் நாள் | திரு. சி. சந்திரகாந்தன் |
| | எட்டாம் நாள் | திரு. வே. ஜெயதேவன் |
| | ஒன்பதாம் நாள் | திரு. சி. பிரகலாதன் |
| | பத்தாம் நாள் | திரு. க. முருகானந்தன் |
| | பதினோராம் நாள் | திரு. மு. சங்கரப்பிள்ளை |
| | பன்னிரண்டாம் நாள் | திரு. ஆ. முருகேசு |
| | பதின்மூன்றும் நாள் | திரு. ச. சிவராமலிங்கம் |
| | பதின்நான்காம் நாள் | திரு. ஆ. சோமசுந்தரம் |
| | பதின்ஐந்தாம் நாள் | திருமதி இ. சிவபாதசுந்தரம் |
| | பதின்ஆறும் நாள் | திரு. சோ. ச. சோமசுந்தரம் |
| | பதின்ஏழாம் நாள் | திரு. கு. சிவகுரு |
| | பதின்எட்டாம் நாள் | திரு. ச. சண்முகநாதன் |
| | பத்தொன்பதாம் நாள் | திரு. இ. சிதம்பரப்பிள்ளை |
| | கஜமுகன் போர் | திரு. வே. மதிவாணன் |
| | விநாயக ஷஷ்டி | திரு. க. சண்முகநாதன் |

## கந்தபுராணப் படிப்பும் பூஜையும்

ஆரம்ப பூஜை – கார்த்திகைத் திங்கள் – ரோகிணி நட்சத்திரம்

| | |
|---|---|
| திருக்கலியாணம் | திருமதி M. சிவஞானசுந்தரம் |
| திருஅவதாரப் படலம் | திரு. சி. வ. இராசமாணிக்கம் |
| சரவணப் படலம் | திரு. சி. சரவணபவான் |
| திருவிளையாட்டுப் படலம் | திரு. வே. ஸ்ரீ கந்தவேல் |
| தாரகன் வதைப்படலம் | திரு. ஆ. முருகேசு |
| குமாரபுரிப் படலம் | திரு. கு. சிவகுரு |
| திருச்செந்திற் படலம் | திரு. பொ. செல்வநாயகம் |
| மார்க்கண்டேயர் படலம் | திரு. கா. சிவபாலன் |
| ஏவிரி நீங்கு படலம் | திருமதி பா. வேலுப்பிள்ளை |

| | | |
|---|---|---|
| மகேந்திர காண்டம் | | திரு. வே. சுப்பிரமணியம் |
| சூரபத்மன் யுத்த படலம் | | திரு. க. வே. முத்துக்குமாரசாமி |
| பானுகோபன் படலம் | | திரு.ச. சோமசுந்தரம் |
| சிங்கமுகாசுரன் வதைப்படலம் | | திருமதி வே. தாமோதரம் |
| சூரபத்மன் வதைப்படலம் | | திரு. வே. பாலசுப்பிரமணியம் |
| தெய்வானை திருமணம் | | திருமதி இ. கிருஷ்ணபிள்ளை |
| சயமுக உற்பத்திப்படலம் | | திரு. க. குமாரசிங்கம் |
| வீரபத்திரன் படலம் | | திரு. வ. வேலாயுதம் |
| யாகசங்காரம் | | திரு. மு. சின்னத்தம்பி |
| அடிமுடிதேடு படலம் | | திரு. ச. நித்தியானந்தன் |
| கந்த விரதம் | | திரு. இ. கணபதிப்பிள்ளை |
| வள்ளியம்மன் கலியாணம் | | திருமதி பொ. திருநாவுக்கரசு |
| அன்னதானம் | | பொது |
| வைரவர் சாந்தி | | பொது |

## திருவெம்பாவை

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | மார்கழி – ஷஷ்டி | திரு. சே. வேல்முருகு |
| இரண்டாம் நாள் | | திருமதி பொ. திருநாவுக்கரசு |
| மூன்றாம் நாள் | | திரு. ச. சோமசுந்தரம் |
| நான்காம் நாள் | | திரு. ப. நாராயணசாமி |
| ஐந்தாம் நாள் | | திரு. ச. விவேகானந்தன் |
| ஆறாம் நாள் | | திரு. மு. ச. தியாகராஜா (S.M.) |
| ஏழாம் நாள் | | திரு. க. விநாயகம்பிள்ளை |
| எட்டாம் நாள் | | திரு. இ. சந்திரசேகரம் |
| ஒன்பதாம் நாள் | | திருமதி பா. வேலுப்பிள்ளை |
| திருவாதிரை, ஆருத்திர தரிசனம் | | திரு. இ. கணபதிப்பிள்ளை |
| தைப்பொங்கல் விசேட பூசை | | பொது |
| தைப்பூசம் | | பொது |

## மகா சிவராத்திரி - மாசி – திரயோதசி – சதுர்த்தசிகளோடு கூடிய திதி

| | |
|---|---|
| 1-ம் யாமப் பூஜை | திரு. சே. வேல்முருகு |
| 2-ம் யாமப் பூஜை | திரு. ச. சண்முகநாதன் |
| 3-ம் யாமப் பூஜை | திரு. க. சிவானந்தம் |
| 4-ம் யாமப் பூஜை | திரு. க. சண்முகநாதன் |

| | | |
|---|---|---|
| **விநாயக சதுர்த்தி** | ஆவணி | திரு. கு. சிவகடாச்சம் |
| **தீபாவளி** | ஐப்பசி - சதுர்த்தசி | திரு. கு. கணநாதன் |
| **திருக்கார்த்திகை** | கார்த்திகை – பூர்ணிமை | திரு. கு. சிவகடாச்சம் |

**மணவாளக் கோலம்** - கார்த்திகை - திங்கள் மீன லக்கினம் ரேவதி நட்சத்திரம்

| | | | |
|---|---|---|---|
| i) | தேவாலய அபிடேகம் | காலை | திரு. சி. மு. கந்தசாமி |
| ii) | மணவாளக்கோல விழா | மாலை | திரு. வே. கந்தையா |

# செல்வ விநாயகன் எங்கள் ஆத்தியடியான்

**தொகையறு**

வேழமுகத்தானே செல்வவிநாயகனே
ஆத்தியூரான் போற்றும் பிரணவத்தின் உட்பொருளே
வல்ல கட்டாடிச் சீமாவினிலே பேரொளியாய் உதித்தவனே — என்றென்றும்
நல்ல திருவாத்தி மரந்தனையே தண்நிழலாய் கண்டவனே
நம்மக்கள் தினம்கூடும் வாய்காற் புளியடியே கோவிலாய் கொண்டவனே
அற்புதநாயகனே ஆத்தியடியானே நின்பாதம் சரணம் சரணம் ஐயா

**பாடல்**

வெற்றிக்கொரு வித்தகனே — மாசற்றோர்க்குத் தத்துவனே
ஓங்காரச் சுடரொளியே — பாரோர் போற்றி நிற்கும் ஒப்பறியா ஒளிப்பிளம்பே
நித்தமும் நாங்கள் துன்பமதை வென்றிடவே — ஓர் மாசுமிலா
இதயமதைப் பக்குவமாய் ஆக்கிடவா. (அற்புதநாயகனே)

சித்திக்கொரு சுந்தரனே — பக்திக்கொரு பட்டான புத்தொளியே
சக்திக்கொரு பாலகனே — சார்ந்தோருக்கு முத்திதரும் வித்தான நாயகனே
நித்தம் உன்மலரடி பணிந்திடவே — தத்தம் இருளான
சித்தமது சுடர்எழுப்ப நம்மோர்க்கு நல்லவரம் தந்திடவா. (அற்புதநாயகனே)

வேதத்தின் நிறைபொருளே — வேகநாயகனை வென்றவனே
நாதத்தின் உறைபொருளே — அன்றோர் ஆங்கார நாயகனை கொன்றவனே
அல்லும்பகலும் உனைநாம் மனதார இறைஞ்சிடவே — நம்மோர்தம் ஒளியில்லா
இதயமதில் அணையாத அகல்விளக்காய் இருந்திடவா. (அற்புதவிநாயகனே)

சாந்தமுறு சற்குணனே — தயவான மித்திரனே
ஏற்றமுறு எழிலரசே — மாண்புமிகு பரம்பொருளே — சந்ததமும்
நின்புகழ்பாடி ஏத்திடுவோம் போற்றிடுவோம் — தலை சூர்ந்து
எம்முள்ளோர் மாசதனை வேரோடு களைந்திடவே — தண்நிலவாய்
அருள்கூட்டி அன்புடனே இணைந்திடவா. (அற்புதநாயகனே)

எழுதியவர்
**சிவ ஸ்ரீ லோகசகாயன்**

# ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தருமபரிபாலன சபை

## 1982-1983 ம் ஆண்டு நிர்வாக சபை

| | |
|---|---|
| தலைவர் :- | திரு. ச. சிவராமலிங்கம் |
| உபதலைவர் :- | திரு. இ. சந்திரசேகரம் |
| செயலாளர் :- | திரு. ஆ. குமாரசாமி |
| உபசெயலாளர் :- | திரு. ச. சிவசுப்பிரமணியம் |
| பொருளாளர் :- | திரு. ஆ. சிவபாதசுந்தரம் |
| உபபொருளாளர் :- | திரு. க. வே. முத்துக்குமாரசாமி |
| முகாமையாளர் :- | திரு. க. சண்முகநாதன் |
| உபமுகாமையாளர் :- | திரு. வி. வேல்முருகு |
| செயற்குழு உறுப்பினர் :- | திரு. சே. வேல்முருகு |
| | திரு. சி. வ. இராசமாணிக்கம் |
| | திரு. ப. நாராயணசாமி |
| | திரு. வே. ஸ்ரீஸ்கந்தவேல் |
| | திரு. கா. இராமச்சந்திரன் |
| | திரு. இ. சிதம்பரப்பிள்ளை |
| | திரு. வீ. ச. நடராசா |

---

● தன்னை யறிந்தருளே தாரகமா நிற்பதுவே
உன்னை யறிதற் குபாயம் பராபரமே.

— தாயுமான சுவாமிகள்

உ

# குடமுழுக்கும் கிரியா விளக்கமும்

எங்கும் நிறைந்த இறைவனுக்குத் திருவுருவத் திருமேனி கற்பித்து, ஆலயங்களிலே எழுந்தருளச்செய்து, வழிபாடு செய்துவருவது சைவமக்களின் பண்டுதொட்டுள்ள மரபாகும். இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்கின்றபோது செய்யப்படுகின்ற கிரியைகள் அனைத்தையும் சுருக்கி ''கும்பாபிஷேகம்'' என்ற சொல்லுக்குள் அடக்கலாம். கும்பாபிஷேகம் குடமுழுக்கு, குடமுழுக்கு நன்னீராட்டு விழா, பிரதிட்டை என்றெல்லாம் பல்பெயர் பெறும்.

கும்பாபிஷேகமாவது நான்கு வகைப்படுத்தப்படும். அவையாவன:

i) **ஆவர்த்தம்** ii) **புனராவர்த்தம்** iii) **அனுவர்த்தம்** iv) **அந்தரிதம்**

ஆவர்த்தமாவது புதிதான இடங்களிலே திருமேனி அமைத்தல், புதிதாகக் கோவில்கள் அமைத்தல், பிரதிட்டை செய்தல், அபிஷேகம் செய்தலாவன அடங்கும்.

புனராவர்த்தமென்றால் கர்ப்பக்கிருகம், பிரகாரம், அட்டபந்தனம், கோபுரம் மற்றும் ஆலயத்தின் பகுதிகள் சேதமடைந்திருப்பின், பாலாலயம் அமைத்து இறைவனை ஆங்கே எழுத்தருளச்செய்து பின்னர் ஆலயத்தைப் புதுப்பித்து வர்ணம்தீட்டி திருப்பணி வேலைகளை முடித்துக் கர்ப்பக்கிருகத்தில் இறைவனை எழுந்தருளச்செய்து அபிஷேகம் செய்வதாகும்.

அனுவர்த்தமென்பது பலகாலமாக வழிபாடு அற்று இருந்ததும், நித்திய நைமித்தியங்கள் அற்றும்போயிருந்த ஆலயங்களைச் சீராக்கி முன்போல் ஆக்கித் திருத்தி நன்நிலையில் கொணர்ந்து பிரதிட்டை பண்ணலாகும்.

அந்தரிதம் எனப்படுவது திருடர்கள், சண்டாளர்கள் ஆலயத்துள் உட்புகுதல், திருமேனியைத் தீண்டுதல் சீர்குலைத்தலால் ஏற்படும் இழப்புக்களைச் சீர்செய்து செய்யப்படும் அபிஷேகம் ஆகும். நித்திய பூஜை தொடரவேண்டிய காரணத்தால் இவ்வகைக் கும்பாபிஷேகத்திற்கு நாள், நட்சத்திரம் நுட்பமாகப் பார்க்கவேண்டியதில்லை.

ஆலயங்களிலே இறைவனைக் கும்பத்திலும், விம்பத்திலும், தம்பத்திலும் பூஜிப்பது வழக்கம். எங்கு பூஜித்தாலும் ஈற்றில் வழிபாடுசெய்த சக்தியை விம்பத்தில் ஆவாகித்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகம் செய்யப் பிரார்த்திப்பதும் வழக்கம். பிரதிட்டை வைபவத்தின்போது செய்யப்படும்போது கிரியைகள் பலவகைப்படும். அவற்றை எல்லாம் விரிவாகக் கூறினால் ஒரு நூல்வடிவில் அமைந்துவிடுமென்று அஞ்சி ஒருசில முக்கிய கிரியைகளைச் சுருக்கமாக நோக்குவோம்.

அவனருளாலே அவன்தாழ் வணங்கி அவனது அருள்பெற்றுக் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தைச்செய்ய உத்தரவு தரவேண்டுமெனச்செய்யும் கிரியை (அனுக்ஞை) என்பதாகும்.

எவ்வகையான வேலைக்கும் பணம் மூலாதாரமாகையால் எமது கருமத்திற்குப் புண்ணிய வசத்தினால் கிடைத்த தனத்தைப் பூஜைசெய்துகிடைத்த திரவியங்கள் எல்லாவற்றையும் யாகம் கட்டுவதற்கு 2 பாகமும், அபிஷேக திரவியங்களுக்கு 1 பாகமும், ஆசாரிய தெட்சணைக்கு 2 பாகமும், மூர்த்தியர்கட்கு 1 பாகமும் வடமொழி தென்மொழி வேதங்கள் ஓதுதற்கு 1 பாகமும் தானதிகட்கு 1 பாகமும், பிராமண போஜனம் 1 பாகமும், சிற்பி பகினங்களுக்கு 1 பாகமும் யாகத் திரவியங்களுக்கு 1 பாகமுமாகப் பிரித்துச் செலவு செய்தல் (**திரவிய வியாபகம்**) ஆகும்.

கணங்களுக்கெல்லாம் தலைவன், தன்னை முதலில் வணங்கிப் புகாத கருமங்களுக்கெல்லாம் விக்கினங்களைக் கொடுப்பவர் விநாயகப் பெருமான். ஆதலால் செய்யப்போகும் கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறவேண்டிச் செய்யும் அபிஷேகம், பூஜை ஹோமம் என்பன **கணபதி பூஜையாகும்.**

சகல உலகத்தின் சேமத்திற்கும், சத்துருக்களின் அழிவிற்கும், புதிய கிராமங்களில், இடங்களில் உள்ள அசுரர், இராட்சதர், பிசாச, பிரம ராட்சதர்களைத் திருப்திசெய்து, அதிதேவதையான வைரவக்கடவுளைப் பூஜிக்கின்ற கிரியை **கிராமசாந்தி**யாகும்.

கும்பாபிஷேகத்தால் உலக ஷேமம் உண்டாகவும், மழைவளம் பெருகவும், துஷ்டர்களினால் வரும் துன்பம் நீங்கவும், சகல பிராணிகளினதும் நோய், பிணி, பீதி நீங்கவும் சூரியன் முதலான நவக்கிரகங்களை வணங்கிப் பூஜித்துச் செய்யும் ஹோமம் **நவக்கிரக மகம்** எனப்படும்.

பின்பு இடத்தைச் சுத்திகரிப்பதற்காகப் பாலாக்கினியால் தகித்துப் பூமியின் அதிபதியான பிரமாவின் துணைகொண்டு சுத்தம் செய்வதாகிய **வாஸ்துசாந்தி** நடைபெறும்

கிராமத்தின் நன்மையையும் சாந்தியையும் நினைந்து பூமிதேவியைப் பிரார்த்தித்து, யாகம் செய்வதற்காக முளையிடும்பொருட்டு மண் எடுத்தற் கிரியை நடைபெறும். இது **மிருத் சங்கிரகரணம்** ஆகும்.

மேற்படி எடுத்தமண்ணில் உலகஷேமத்திற்காக நவதானியங்களைப் பாலில் ஊறவைத்துச் சந்திரனை வழிபாடுசெய்து முளையிடும் **அங்குரார்ப்பணக்** கிரியை நடைபெறும்.

தான் எடுத்துக்கொண்ட கருமம் இனிதே நிறைவேறவும் இடையூறு ஏற்படாதவாறும், உலகை ஆசாபாசங்களின் நின்றும் விலகி நிற்கவும் காப்புக்கட்டும் கிரியை **இரட்சாபந்தனம்** செய்வார் ஆச்சாரியார்.

பின்பு குடத்தைச் சுத்திகரித்து நூலை நாடி நரம்புகளாகவும், நீரைக் கங்கை முதலான புண்ணிய நதிகளில் இருந்தும், தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சந்தைச் சடையாகவும் வஸ்திரத்தைத் தோலாகவும் ஜெஞ்ஞோப வீதத்தைப் பஞ்சப் பிரம்ம மந்திரமாகவும் பூஜித்துச் செய்யப்படும் கிரியை **கடஸ்நாபனம்** ஆகும்.

கலாமயமான யாகசாலையில் பரிவாரமூர்த்திகள் சூழ இருக்க, யாகேஸ்வரன், யாகேஸ்வரி, ஞானவான் ஏந்தி யாகத்தைக் காக்கவும்செய்து, பூஜை, ஹோமம் முதலியன செய்து **யாகசாலைப் பூஜை** நடைபெறும்.

பின்பு சுபமுகூர்த்த நேரத்தில் கும்பம், வேத பாராயணம் திருமுறைகள் ஓத, பேரிவாத்தியம் ஒலிக்க, சங்குநாதம் முழங்க, பக்தர்கள் புடைசூழ, வீதிப்பிரதட்ஷண்மாக வந்து மூலஸ்தானத்தில் போந்து பிம்பத்திற்குச் செய்யும் **கும்பாபிஷேகம்** நடைபெறும்.

அபிஷேகம் முடிந்து கதவைச் சாத்தி பசு, நிறைகுடம், ஆசாரியர், கண்ணாடி, தீபம், கன்னிகை, சுமங்கலி, எஜமான், பக்தஜனம் முதலியோரைத் தனித்தனி தரிசிக்கும் **தசதரிசனம்** நடைபெறும்.

பின்பு தேவர்களின் பூஜைக்காகக் குறிப்பிட்ட நாளிகைக்கு மூலஸ்தானத்துக் கதவு சாத்தப்பட்டிருக்கும். அதன்பின்பு மகா அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று குருவானவர் பெருமானின் விபூதிப்பிரசாதங்களை வழங்கி ஆசீர்வாதஞ்செய்து கும்பாபிஷேகப் பலன்களை எஜமானுக்கு வழங்கும் **எஜமான பலப்பிராப்தி** நடைபெறும்.

சுபம் உண்டாகுக.

**வ. வே. நவரத்தினக் குருக்கள்**
ஆசிரியர்,
வேலாயுதம் ம. வித்தியாலயம்,
பருத்தித்துறை.

உ

# திருக்குடமுழுக்குக் கிரியாகால நிகழ்ச்சிகள்

கனியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் — அரியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

துந்துபி வருடம் சித்திரை மாதம்

13-ம் திகதி *(26-4-1982)* திங்கள்: பாலஸ்தாபனம்

**தைமாதம்**

**10-ம் திகதி** *(23-1-83)* ஞாயிறு: ஆசார்யவரணம், விநாயகவழிபாடு, தேவ பிராம்மண அனுக்ஞை, தனபூசை, சங்கடஹர மஹாகணபதி ஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி.

**11-ம் திகதி** *(24-1-83)* திங்கள்: நவக்கிரக மஹம், யந்திரபூசை, கோவாசம், வஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், காலாகர்ஷணம், மஹாயாகாரம்பம், பஞ்சாக்கினி பூசை, ஸ்தூபி ஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திர பிம்பஸ்தாபனம், அஸ்டபந்தனம், யாக தீபாராதனை.

**12-ம் திகதி** *(25-1-83)* செவ்வாய்: ஆசார்ய சந்தியானுஷ்டானம், யாகபூசை, ஹோமம் எண்ணெய்க்காப்பு சாத்தல், பூதசுத்தி, ஆலயசுத்தி, ரக்ஷாபந்தனம், பூர்வசந்தானம், யாகபூசை விசேட திரவிய ஹோமம், மூலமந்திர, மாலாமந்திர, ஆகர்ஷணமந்திர ஹோமம், ஸ்பர்சாகுதி ஆசார்ய பூஜனம் முதலியன

**13-ம் திகதி** *(26-1-83)* புதன்: மஹாபூர்ணாகுதி, விசேஷ பூசை, திருமறை திருமுறை பாராயணம், ஆசீர்வாதம், யாதராதானம், கும்ப வீதியுலா, மகாகும்பாபிசேகம், தேவாதிகள் குப்த பூசை, தசதர்சனம், மகா அபிஷேகம், ஆசார்யசம் பாவனை, ஆசீர்வாதம், விசேடபூசை, பஞ்சமுக அர்ச்சனை, சுவாமி வீதியுலா முதலியன. அன்னதானம்.

**தை 14-ம் திகதி** *(27-1-83)* தொடக்கம் மாசி 3 *(15-2-83)* வரை 20 நாட்கள் மண்டலாபிஷேகம்

**மாசிமாதம் 3-ந் திகதி** *(15-2-83)* செவ்வாய் மாலை 5 மணி

அனுஞ்ஞை, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ஆசாரிய ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், சங்கு ஸ்தாபனம், அக்கினி விபஜனம், தீபாராதனை.

**மாசிமாதம் 4-ந் திகதி** *(16-2-83)* புதன் காலை 7 மணி

புண்ணியாகவாசனம், பூதசுத்தி, யாகபூசை, ஹோமம், தீபாராதனை, கும்பவீதியுலா, மகாசங்காபிஷேகம், மகேஸ்வரபூசை.

## மகா கும்பாபிஷேகத்தில் பங்கு கொள்ளும் குருமணிகள்

பிரதமகுரு கிரியா கால முக்தாமணி
சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் சுதுமலை)

சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் புங்குடுதீவு.
,, சி. குமாரராஜாக்குருக்கள் குப்பிளான்.
,, ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் இணுவில்.
,, ந. இராதாகிருஷ்ணக் குருக்கள் நயினை.
,, ச. சபேசக் குருக்கள் பருத்தித்துறை.
,, கு. பரமேஸ்வராக் குருக்கள் தாவடி.
,, வை. ஜீவநாதக் குருக்கள் வேலணை.

சர்வசாதகம் - பிரம்மஸ்ரீ வி. நாராயணசர்மா
(அதிபர், ஸ்ரீ துர்க்கா வேதாகமபாடசாலை)

வேதபாராயணம்: பிரம்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகள் கோண்டாவில்.

ஆலய பிரதமகுரு: சதா. சிதம்பரப்பிள்ளைக் குருக்கள்.

உதவிக் குருக்கள்: வ. வே. நவரத்தினக் குருக்கள் [வேலாயுத வித்தியாலய ஆசிரியர்]

சிற்பாசாரியார்: திரு. கோ. வேலுப்பிள்ளை, தம்பசிட்டி, பருத்தித்துறை.

### சமய சொற்பொழிவாளர்கள்:

(1) திரு. வை. கா. சிவப்பிரகாசம்
(2) செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(3) டாக்டர் முருகவேள் பாலசுந்தரம்
(4) கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(5) ஸ்ரீமத் ஞானப்பிரகாசதம்பிரான் சுவாமிகள் (மெய்கண்டான் ஆதீனம்)

### வேறு நிகழ்ச்சிகள்:

தும்பளை சிவப்பிரகாச ம. வித்தியாலயம்

1. பட்டிமன்றம் 2. நாடகம் (நெறியாளர்: திருமதி பு. சேதுநாயகம்)
3. நாடகம் (நெறியாளர்: திரு. தோ. செபமாலை)
4. வில்லுப்பாட்டு (சின்னமணி குழுவினர்)

### மங்கள இசை:

மேளக்கச்சேரி: 1. சின்னராசா கோஷ்டி.
2. கே. பி. சத்தியமூர்த்தி குழுவினர்

கா. சண்முகநாதன்
(முகாமையாளர்)

39368

சகலரும் எல்லா நலமும் பெற்றுய்ய
ஆத்தியடி பிள்ளையார் அருள்வாராக

பருத்தித்துறை நகரில் புகழ்பெற்ற
புகைப்பட பிடிப்பாளர்கள்

**"குகன் ஸ்ரூடியோ"**

துறைமுக வீதி,
பருத்தித்துறை.

ஆத்தியடிப் பிள்ளையார் அருள்பெற வேண்டுகின்றோம்

**புஹாரி ரெக்ஸ்ரைல்ஸ்**

நவீன சந்தை,
பருத்தித்துறை.

பருத்தித்துறையில்

- தொலைக்காட்சிப் பெட்டிகள்
- மின்னியக்க, கைக்கடிகாரங்கள்
- வானொலிப் பெட்டிகள்
- சைக்கிள்கள்

என்பவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

## ராஜன் சைக்கிள் வேக்ஸ்

பிரதான வீதி,
பருத்தித்துறை.

☎ 574

சகலரும் எல்லா நலமும் பெற்றுய்ய
ஆத்தியடி பிள்ளையார் அருள்வாராக

பருத்தித்துறை
பலநோக்கு கூட்டுறச் சங்கம்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

* ரொபியலக் பெயின்ற் வகைகள்
* எஸ்லோன் வகைகள்

மற்றும்

* மின்சார உபகரணங்கள்
* இரும்பு சாமான்கள்

நிதானவிலையில் பெற்றுக்கொள்ள

**ராஜன் எலக்றிக்கல்ஸ்**
பஸ்நிலையம்,

**ராஜன் ஹாட்வெயர்ஸ்**
பருத்தித்துறை.

---

**நிர்மலாவின் நகை என்றால்**

நயம் ✲ நாணயம் ✲ நம்பிக்கை

காலத்தால் அழியாத கவர்ச்சிமிகு தங்க நகைகளுக்கு

பருத்திநகரில் ஓர் முன்னணி தங்க ஸ்தாபனம்

**நிர்மலா நகை மாளிகை**

210, பிரதான வீதி, வவுனியா.

உறுதியான எவர்சில்வர் பாத்திரங்களுக்கும்
நினைவில் நீங்காத அன்பளிப்பு பொருட்களுக்கும்

பருத்தித்துறையில் பெயர் பெற்ற ஸ்தாபனம்

# சாந்தி ஸ்ரோர்ஸ்

**15, மக்கள் சந்தை, - பருத்தித்துறை.**

---

பாடசாலை உபகரணங்கள்
காரியாலய எழுதுபொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
நயம் நாணயம் நம்பிக்கையுள்ள
ஸ்தாபனம்

# துவாரகா

**உரிமையாளர்:- க பிள்ளையினர்**

**மக்கள் சந்தை, பருத்தித்துறை.**

தரம்மிகு ஜவுளி வகைகளுக்கு

★ "மொடேண் ரெக்ஸ்ரைல்ஸ்" ★

உங்கள் அன்புக்குரியவர்களுக்கான நினைவில் நிற்கக்கூடிய
அன்பளிப்புப் பொருட்களுக்கு நாடுங்கள்

"மொடேண் பான்சி பலஸ்"

பிரதான வீதி, பருத்தித்துறை.

---

வீரகேசரி, மித்திரன் பத்திரிகைகளுக்கு பருத்தித்துறையின்
விற்பனை முகவர்

மு. பொ. வீரவாகு

வீரவாகு பில்டிங்,
பருத்தித்துறை.

சகலரும் எல்லா நலமும் பெற்றுய்ய
ஆத்தியடி பிள்ளையார் அருள்வாராக

## புலோலி
## பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
### பருத்தித்துறை.

---

ஆத்தியடி பிள்ளையாரின் அருள் பெறுவோமாக

**Abrami Printers**

**17B, Jummah Mosque Lane,**
**JAFFNA.**

சகலரும் எல்லா நலமும் பெற்றுய்ய
ஆத்தியடி பிள்ளையார் அருள்வாராக

## சிவா ஸ்ரோர்ஸ்

(சுஜல்)

பிரதான வீதி, பருத்தித்துறை.

**றெடிமேட், இறக்குமதியான ஜவுளிகள்.**

---

With the Best Compliments of

# S. R. SELLATHURAI

Importers Wholesale and Retail Textile Merchants

Telephone: **296**

**216, K. K. S. Road, JAFFNA.**

குறைந்த விலையில் நிறைந்த சேவை

# கமநல சேவை நிலையம்

(பருத்தித்துறை தொகுதி)

அம்பன் குடத்தனை

விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான

- உரவகைகள்
- கிருமிநாசினிகள்
- காய்கறி விதைகள்
- மரக்கன்றுகள்

எம்மிடம் கிடைக்கும்

□□ உழவு யந்திரமும் வாடகைக்கு விடப்படுகின்றது. □□

கிளை: வியாபாரிமூலை
புலோலி மேற்கு
பருத்தித்துறை.

அம்பன்
குடத்தனை,

பயிரை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்

ஆத்தியடிப் பிள்ளையார் அருள்பெற வேண்டுகின்றோம்

சகலவிதமான ஆங்கில ஆயுர்வேத மருந்துகளையும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

## முருகன் மெடிக்கல் ஸ்ரோஸ்

**165 / 3, பஸ்நிலையம், பருத்தித்துறை.**

சகலரும் எல்லா நலமும் பெற்றுய்ய
ஆத்தியடிப் பிள்ளையார் அருள்வாராக!

உங்களுக்குத் தேவையான பலசரக்கு சாமான்களையும்
சகல சாய்ப்புச் சாமான்களையும்
ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

## 'வேலவன் ஸ்ரோஸ்'

**மக்கள் சந்தை, பருத்தித்துறை.**

௳

# நன்றி நவிலல்

திருக்கோவில்களில் திருப்பணி செய்து, பேரின்பப்பேற்றைத் துய்த்த சமய குருவர்களில் அப்பர் சுவாமிகள் முதன்மையானவர்.

ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத் திருத்தொண்டில் பங்கு கொண்டோர் அனைவரும் சமயக்குரவர்களின் பணியைத் தொடர்ந்து செய்யும் திருத்தொண்டர்களாகக் கருதி அவர்களனைவரையும் வணங்குகின்றோம்.

ஆலய மகாகும்பாபிஷேக திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது பல அடியார்கள் பல்கோணங்களிலிருந்தும் பணிசெய்ய முன்வந்துள்ளனர். திருவாளர்கள் க. வே. முத்துக்குமாரசாமி, க. பாலச்சந்திரன், க. விக்கினேஸ்வரன், க. சிவப்பிரகாசம் விநாயக தூபியினதும் பளிங்கு கற்கள் பதித்தல் பணியையும்; கா. இராமச்சந்திரன் முருக பெருமானினதும் பைரவ பெருமானினதும் தூபிகளையும் இ. சந்திரசேகரம் மணிக் கோபுர தூபிகளையும் புனரமைப்பு வர்ணமை தீட்டல் போன்ற திருப்பணிகளைத் தனித் தனியே தம் பொருள் செலவிலேயே செய்து முடித்த கணபதி கடாட்சம் பெற்ற அன்பர்களாவர்.

திருவாளர்கள் இ. கணபதிப்பிள்ளை தேவர்சபை மண்டபத்தையும், ச. கனகசபை, சண்டேஸ்வர மூல விக்கிரகம் அதன் மண்டபத்தையும், க. சிதம்பரப்பிள்ளை இளைப்பாறிய ஆசிரியர், சண்டேஸ்வர எழுந்தருளி விக்கிரகத்தையும், க. குமாரசிங்கம், சி. தியாகராசா அவர்கள் விநாயக அங்கியையும் அமைத்தற்காய பொருளனைத்தும் பொழிந்து ஆத்தியடியான் அருள் பெற்ற அடியவர்களாவர்.

திருவாளர்கள் சே. வேல்முருகு பிள்ளையாரின் மகாகும்பாபிஷேகத்தையும், வே. பாலசுப்பிரமணியம், முருகப்பெருமானின் மகாகும்பாபிஷேகத்தையும், வி. வேல்முருகு பைரவப் பெருமானின் மகாகும்பாபிஷேகத்தையும், டாக்டர். கா. தியாகராசா சங்காபிஷேகத்தையும், தனிப்பட்ட உபயமாக நிறைவேற்ற நிதியுதவி விநாயகனின் நல்லருளைப் பெற்றனர். இவர்களனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி ம. சிவகுருநாதன் குதிரை வாகனத்தையும், திருவாளர்கள் சி. மு. கந்தசாமி க. நடராசா அவர்கள் மயில் வாகனத்தையும், பொது உபகரிப்பால் இதர வாகன கேடகங்களும் திருத்தியமைக்கப்பட்டன. வாகனசாலையாக இருந்த இடம் தற்போது இரு அறைகள் கொண்ட குரு வாசஸ்தானமாகவும், புதிய இடத்தில் வாகன சாலையும் பொது உபகரிப்பிலேயே செய்யப்பட்டன.

மின், வெளிச்சங்கள், மின்இணைப்பு வேலைகள், புதிதாகவும், பழையன சீர்செய்தலையும் திரு. சி. தியாகராசா, இளைஞர் கல்வித் தேர்ச்சி சங்க அங்கத்தினர்; நிதியிட்டும், சிரமதானமாகவும் செய்துள்ளனர். இவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

பாலஸ்தாபனம் முதல் மகாகும்பாபிஷேகம் வரை அனேக வைபவங்களும், திருப்பணி வேலைகளும் பொது உபயமாகச் சிறப்பாக நடைபெற்றன. அதற்கென பிள்ளையாரின் அடியார்கள், இவ்வூரில் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும், மிக விருப்புடன் நிதி வழங்கியுள்ளார்கள் என்பதை மிக நன்றியறிதலுடன் அறியத்தருகின்றோம். இவர்களுள், சிங்கப்பூரிலிருக்கும் செல்வர்களாகிய சோ. சரவணமுத்து. க. முருகானந்தன் அவர்கள் ஆர்வத்துடன் நிதி சேகரித்து அனுப்பிவைத்தமை விசேடமாகக் குறிப்பிடப் பாலதாகும். மகாகும்பாபிஷேக சங்காபிஷேக வைபவங்களுக்கு வேண்டிய

திரவியங்கள் பொருட்கள் பெருமளவில் பக்தர்களால் வழங்கப்பட்டன பாலர் தொடங்கி முதியோர்வரை சரீர, பொருள், ஆலோசனை உதவிகள் புரிந்தனர். அவர்களுள் திரு. வீ. சு. நடராசா அவர்களின் சேவை அளப்பரியதாகும். மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு மகேஸ்வர பூசை அன்னதானம் அடியார்களுக்கு வழங்கலை திரு. சோ. ச. சோமசுந்தரம் அவர்களும், அதைத் தொடர்ந்து இருபது நாட்கள் மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற பிள்ளையார் பக்தர்கள் பலர் தமது செலவில் தனித் தனியே பொறுப்பேற்று நடாத்தி நல்லருள் பெற்றுள்ளனர். இன்னும் இப்பாலும் அப்பாலும் உள்ள தொண்டர்கள் பலர். இவர்களனைவர்க்கும் விநாயகர் கடாச்சம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

திரு. கோ. வேலுப்பிள்ளை சிற்பாசிரியர் தம்பசெட்டி அவர்கள் தலைமையில் புதிய திருத்த கட்டட வேலைகளும் தூபிகளின் புனரமைப்பும் புதிய நேவர்சபை, சண்டேஸ்வரர் ஆலய நிர்மாணமும் செய்யப்பட்டுள்ளன. திரு கோபால் பருத்தித்துறை குளுவினரால் வர்ணங்கள் அழகாகத் தீட்டப்பட்டன. இவர்களனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

பாலபிஷேக, கும்பாபிஷேக சங்காபிஷேக திருப்பணி வேலைகள் போன்ற ஒவ்வொரு பணியையும் இனிது நிறைபெற அல்லும் பகலும் அயராது கடமையாற்றிய ஆலய முகாமையாளராகிய திரு க. சண்முகநாதன் அவர்கட்கு எங்கள் தரும பரிபாலன சபையின் சார்பிலும், மற்றும் அடியார்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்டட நிர்மாண திருத்த வேலைகளுக்கு வேண்டிய பொருட்களைப் பெறுவதற்கு உதவி புரிந்த பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் வி. வேலும்மயிலும் அவர்கட்கும், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் திரு. க. சதாசிவம் அவர்கட்கும் வர்த்தக பெரியார் திரு. க. வேலுப்பிள்ளை அவர்கட்கும் முகாமையாளர் சார்பிலும் தரும பரிபாலன சபையின் சார்பிலும் மற்றைய அடியார்கள் சார்பிலும் எம் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகாகும்பாபிஷேக கிரியைகளைச் சிவாகம முறைப்படி மிக சிறப்பாக நடாத்தித் தந்த பிரதம குரு கிரியாகால முத்தாமணி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் அவர்கட்கும் அவரோடிணைந்து செயலாற்றிய ஏனைய சிவாச்சாரியர்கள் பிராமணோத்தமர்கள் அனைவர்க்கும் எமது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

உற்சவகாலங்களில் எமது வேண்டுகோட்கிணங்க சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றிய, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கும், யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கட்கும், சமய அறிவுரைகள் வழங்கிய மற்றும் பெரியார்க்கும், ஆலயத்தின் பொலிவு காண்பதற்கு தம்மை ஒறுத்து உதவி புரிந்து உபகரித்து வருகின்ற நற்றவத் தொண்டர்கள் எல்லோருடைய திருவடிக்கும் எம் வணக்கம் என்றும் உரியதாகுக.

சிவாச்சாரியார்களையும் அவர்கள் குடும்பத்தவர்களையும் உபசரிப்பதிலும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து முன்னின்று உதவிய பண்பாளர்களுக்கும் எமது பாராட்டுதலையும் நன்றியுணர்வையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலர் வெளியிடுவதற்கு வேண்டிய, ஆசியுரை, கட்டுரை, வாழ்த்துரை முதலியவற்றை வழங்கியோர்க்கும், ஆலய வரலாற்றைத் திரட்டி வெளியிடுவதற்கு உதவிய, திருவாட்டிகள் பார்வதிதேவி, வேலுப்பிள்ளை, அன்னபூரணம் வேலுப்பிள்ளை அவர்கட்கும் ஏனையோர்க்கும் எமது உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.


இலவசமாக புகைப்படங்களை எடுத்துதவிய குகன் ஸ்ருடியோ ஸ்தாபனத்தார்க்கும் விளம்பர மார்க்கமாக பண உதவி செய்த வர்த்தகப் பெருமக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இம் மலரை மிகக்குறுகிய காலத்தில் சிறப்புற அச்சுருவேற்றித் தந்த யாழ் ''அபிராமி'' அழுத்தக உரிமையாளருக்கும் அங்கு பணியாற்றும் அன்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றி.

மேலும் எமதறிவிற்கு எட்டாத வகையில் திருத்தொண்டு புரிந்து, இங்கு இடம் பெறவேண்டிய அடியார்கள் பலர் அவர்கள் வாழ்க அவர் தொண்டும் சேவையும் வெல்க.

வணக்கம்

ஆ. குமாரசாமி - செயலாளர்
ச. சிவசுப்பிரமணியம் - உபசெயலாளர்
ஆ சிவபாதசுந்தரம் - பொருளாளர்
தரும பரிபாலன சபை செயற்குழுவின் சார்பில்
ஆத்தியடி - பருத்தித்துறை
*1983-02-16*



39368

*With the Best Compliments of:*

# GANESHARATNAM & CO. LTD.

Building Contractors Transport Agents of Building Materials Suppliers
Tourist & Travels Agency

24, International Buddist
Centre Road, (I. B. C.)
Wellawatta,
COLOMBO-6.

15/5, Sivapiragasam Road,
Vannarponnai,
JAFFNA.
☎ 7658

Alaveddy North,
ALAVEDDY.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

முன்னிளங் காலத்தி லேபற்றி
னேன்வெற்றி மீனுயர்ந்த
மன்னிளங் காமன்தன் மைத்துன
னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களி றேயிமை
யோர் சிங்க மேயுமையாள்
தன்னிளங் காதல னேசர
ணுவுன் சரணங்களே.


மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே உதவுகிறது.

மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

☎ 23233


ABRAMI PRINTERS, 17B, JUMMAH MOSQUE LANE, JAFFNA.